
# விடுதலைப்புலிகள்

குரல்: 59 ஆடி - 1995 அன்பளிப்பு: ரூபா 5/=


## உள்ளே


* 'முன்னோக்கிப் பாய்தல்' மீது 'புலிப்பாய்ச்சல்'
* காங்கேசன்துறை: புலி பாய்ந்த கடல்
* போராட்டத்தின் அடுத்த பரிணமிப்பு
* மண்டைதீவு: அன்றைய நினைவோடு இன்றைய களம்
* பிணந்தின்னும் கழுகாக 'சமாதானப்புறா'
* தேசத்தின் இதயத்தில் நடந்த பெருஞ் சமர்!

# படையெடுப்பை முறியடிக்க ஒன்றிணைவோம்



**'முன்னோக்கிப் பாய்தலி'ல் படுதோல்வியடைந்து பின்வாங்கிச் சென்றுள்ள சிங்களப் படை, அதன் அடுத்த கட்டத்தை ஆரம்பிக்க நாள் பார்த்துக்கொண்டிருக்கின்றது. அதேவேளை, இந்தப் படையெடுப்பையும் தடுத்து முறியடிக்கும் அனைத்துத் தயார்ப்படுத்தலில் புலிகள் இயக்கமும் ஈடுபட்டிருக்கின்றது. எனினும், அதை வெற்றிகரமாக நிறைவேற்ற வேண்டுமெனில் - புலிகள் இயக்கத்தின் ஆட்பலமும், ஆயுத பலமும் அதிகரிக்கப் பட வேண்டும்.**

அரசின் 'முன்னோக்கிப் பாய்தல்' இராணுவ நடவடிக்கை, அரசுப் படைகளுக்குப் பெருந் தோல்வியையும் - தமிழ் மக்களுக்குப் பேரழிவுகளையும் கொடுத்த போதும், குடாநாட்டை ஆக்கிரமிக்கும் நாசகாரத் திட்டத்தைச் சந்திரிகா அரசு இன்னமும் கைவிடவில்லை. வடபுலத்தில் தொடர்ந்தும், சிங்களப் படைகளும் - படைக்கலன்களும் குவிக்கப்பட்டுவருகின்றன.

சந்திரிகா அரசைப் பொறுத்தளவில், ஒரு பாரிய இராணுவ வெற்றியைப் பெறுவதிலேயே அது கண்ணுங்கருத்துமாக இருக்கின்றது. அந்த இராணுவ வெற்றி மூலம் இரண்டு குறிக்கோள்களை அடைய, சிங்கள அரசு விரும்புகின்றது. →


தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு



www.eelamview.com

தமிழீழ விடுதலைப் புலிகள்
Liberation Tigers Of TAMIL EELAM

# புலிகளின் குரல்

## "ஒப்பறேசன் புலிப்பாய்ச்சல்" - போராட்டத்தின் அடுத்த பரிணமிப்பு

சந்திரிகாவைப் பிரதம தளகர்த்தராகக் கொண்ட சிறீலங்காவின் முப்படைகளும் ஒன்றிணைந்து அரங்கேற்றிய 'யாழ்ப்பாணப் படுகொலை' - தமிழினத்தின் தேசிய ஆன்மாவின் மேல் விழுந்த இன்னொரு கோர வடு.

1995ஆம் ஆண்டு யூலைத், திங்கள் 9ஆம், 10ஆம், 11ஆம் நாட்களில், குடாநாட்டின்மீது பெருமெடுப்பிலான படையெடுப்பு ஒன்றை நடாத்தி - கண்மூடித்தனமாக குண்டுத்தாக்குதல்களை நிகழ்த்தி - இந்த 'யாழ்ப்பாணப் படுகொலை'யை சந்திரிகாவின் படை ஈவிரக்கமற்று அரங்கேற்றியது.

இதுவரை 239 பொதுமக்கள் கொல்லப்பட்டதாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளது; காயப்படுத்தப்பட்ட ஆயிரமளவான ஆட்களில் ஏராளமானோர் அங்கவீனமாக்கப்பட்டுள்ளதாகவும், அதிகாரபூர்வ அறிக்கைகள் கூறுகின்றன.

தமிழர்களைப் படுகொலைசெய்யும் பெரும் இன அழிப்பு நடவடிக்கைகளை நிகழ்த்தியவர்களாக, சரித்திரத்தில் தங்கள் பெயர்களைப் பதித்துக்கொண்ட பேரினவாத சிங்களத் தலைவர்களின் வரிசையில், சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க என்ற பெயரும் இப்போது ஆழமாகப் பதிவுசெய்யப்பட்டுவிட்டது.

ஜெயவர்த்தனாவின் கட்டளைகளும், பிரேமதாசாவின் உத்தரவுகளும், ராஜீவ் காந்தியின் ஆணைகளும் தந்த விளைவுகளைப் போலவே - சந்திரிகாவின் பணிப்புகள் தந்த விளைவுகளும் கோரமானவை.

ஜெயவர்த்தனா, காமினி, லலித், ரஞ்சன், பிரேமதாசா, விஜேதுங்கா போன்ற சிங்களத் தலைவர்கள் - நேரடியான இராணுவச் செயற்பாடுகளாக மட்டுமே, தமிழ் மக்களுடனான அணுகுமுறைகளை வைத்துக்கொண்டார்கள்.

''போர் என்றால் போர்!'' என்றும், ''தமிழர் பிரச்சினைக்கு இராணுவ வழிமுறைகளிலேயே தீர்வு காணவேண்டும்'' என்றும் - சொன்னவற்றையே நடைமுறைப்படுத்தியும் - தமிழினத்துக்கு எதிராக அவர்கள் பகிரங்கமாகவேதான் செயற்பட்டார்கள்.

ஆனால், சந்திரிகா அப்படிச் செய்தவரல்ல; தமிழர்களுக்கு அவர் போர்முகத்தோடு அறிமுகமானவரல்ல; சமாதானத்தைத் தவிர வேறெதையும் அவர் பேசியவருமல்லர்.

'' சமத்துவமே என் மூச்சு '' என்றார்; '' சமரசமே என் இலட்சியம் '' என்றார்; '' நாட்டை அழிக்கும் கொடும் போரினை நிரந்தரமாகவே நிறுத்துவேன் '' எனச் சூளுரைத்தார். '' தமிழ் மக்களை நீண்ட காலமாக இன்னலுக்குள்ளாக்கியிருக்கும் இனப்பிரச்சினைக்கு அமைதிவழியில் தீர்வு காண்பேன் '' என வாக்குறுதியளித்தார்.

அரைநூற்றாண்டாக அழிந்த இனம் அகமகிழ்ந்தது; நோவுபட்ட உள்ளங்கள் நெகிழ்ந்தன. எம் துயரங்களையெல்லாம் சந்திரிகா துடைத்தெறியப்போகின்றார் என்று, இனம்புரியாத இன்பத்தில் தமிழர்கள் திளைத்தார்கள். அவரது வார்த்தை ஜாலங்களுக்கு தமிழர்கள் வசியப்பட்டார்கள் என்பது உண்மை. பழைய பேரினவாதிகள் செய்த பாவங்களுக்கெல்லாம், அம்மையார் தனது செயற்பாடுகள் மூலம் பாவமன்னிப்புத் தேடுவார் என, தமிழர்கள் நம்பினார்கள். இனவாதம் புரையோடி அசுத்தப்பட்டிருந்த சிங்கள இனத்தைப் பரிசுத்தப்படுத்தி - இனங்களைச் சமத்துவப்படுத்துவார் என்று தமிழர்கள் காத்திருந்தார்கள்.

ஆனால் - சந்திரிகா சதி செய்தார். நம்பிக்கைவைத்த மக்களுக்கு பச்சைத் துரோகம் இழைத்தார். நயவஞ்சகமாக நடந்தார். தமிழர்களின் முதுகில் குத்தினார். சாந்தசொரூபியாகக் காட்சிகொடுத்தவர் நாசகாரியாக மாறினார். சமாதானம் பேசியவர் சன்னதம் கொட்டினார். பழைய பேரினவாதிகளைவிட கொடூரமானவராகி - திமிர்த்தனத்தோடு அவர் போர் தொடுத்தார்.

அமைதிப் பேச்சுக்களையே நடாத்துவேன் என்றவர், பீரங்கிக் குண்டுகளாலும், விமானக் குண்டுகளாலும் பேசத்தொடங்கினார். 'யாழ்ப்பாணப் படுகொலை'யை ''சமாதானத்திற்கான போர்'' என்று கூறியபடி அரங்கேற்றினார்.

நாங்கள் குடியிருந்த நிலங்களுக்குள் பேய்கள் புகுந்தன. தோட்ட வெளிகளை 'டாங்கி'கள் உழுதன. சமாதானத்தை வேண்டியவர்களின் மீது படைக்கலங்கள் பதம்பார்த்தன. அவலம்......அவலம்...... திரும்பிய பக்கமெல்லாம் அவலம். யாழ்ப்பாணக் குடாநாடு துயரக்கடலில் மூழ்கியது. பிய்ந்து சிதறிய பிரேதங்கள், இடிந்து நொருங்கிய வீடுகள், உருக்குலைந்த கிராமங்கள், அவலமாய் ஓடிய மக்கள்...... ஊர்மனைகளைத் துவம்சம் செய்தபடி இடியோசையோடு முன்னேறின சந்திரிகாவின் படைகள்.

எல்லார் முகங்களிலும் பீதி! எல்லார் அகங்களிலும் அச்சம்! எல்லார் கண்களிலும் ஏக்கம்! ''என்னதான் நடக்கப் போகிறது?'' எல்லாரிலுமே கேள்விக்குறி. ''சிங்களப் படைகள் எங்கள் குடியிருப்புக்களுக்குள் புகுந்து குதறியெறியத்தான் போகின்றனவா? எம்மைக் கொன்றுதின்று ஏப்பம் விடத்தான் போகின்றனவா?'' கடந்தகால வரலாற்றின் கொடூரங்கள் கண்முன்னால் விரிந்தன. ஈவிரக்கமற்ற இன அழிப்பின் கோரங்கள் நினைவுகளில் அசைந்தன. மீண்டும் குருதி ஆறா? திரும்பவும் பிண மலைகளா? மீளவும் அகதி வாழ்வா? சந்திரிகாத் தாயே நீயுமா? நாலாபக்கமும் முற்றுகையிடப்பட்டு நிர்க்கதியாய் அலறும் எங்கள் குரல் உலகின் செவிகளில் விழாதா? தப்பி ஓட வழியுமற்று செத்தழியத்தான் போகின்றோமா? ஓடோடி வந்து காக்க ஒருவருமே இல்லாமல் இலட்சக்கணக்கில் நாங்கள் கொன்றொழிக்கப்படப் போகின்றோமா...? ஐயகோ......! என்றபடி ஈழத்தமிழினம் மட்டுமல்ல, உலகம் எங்கும் வாழும் தமிழர்கள் தலையில் கை வைத்தபடி இருந்தனர்.

ஆனால் -

அச்சப்பட்டு அவலப்பட்டு, மக்களெல்லாம் மனம் இடிந்து புலம்பிக்கிடந்த வேளை - அமைதியாகவும், நிதானமாகவும் அவதானித்தான் எங்கள் தலைவன். கண்ணீர் விட்டுக் கதறிப் புரண்டோரின் கதையறிந்து நெஞ்சு பொருமினான்; அவனது ஆன்மா துடித்தது. தூக்கம் மறந்தான்; துயில் கொள்ளும் வேளை மறந்து - தாக்கும் வழி ஆராய்ந்தான். பலியெடுத்து வந்தோரைப் பழிவாங்கும் வேட்கையோடு திட்டமிட்டான் எங்கள் காவலன்; நுட்பமாகவும், நேர்த்தியாகவும் வியூகம் வகுத்தான் எமது இனத்தின் தளபதி.

அதுதான் 'ஒப்பறேசன் புலிப்பாய்ச்சல்!'

அன்று - வடமராட்சித் தாக்குதலில் இறுமாந்திருந்தவர்களின் இதயக் கூட்டுக்குள் மில்லரை அனுப்பிய தலைவன், இன்று - முன்னேறிப் பாய்ந்து முறுக்கேறி நின்றவர்மீது 'புலிப்பாய்ச்சலை' நிகழ்த்தினான். தமிழரின் விடுதலைப் போர்ச் சரித்திரத்தில் புதியதோர் திருப்புமுனைச் சமர். எமது மக்களை அடித்துத் துரத்தியவர்களை - அடித்து விரட்டிய வரலாறு. நூற்றுக்கணக்கில் வீழ்த்தப்பட்ட எம் மக்களின் துன்ப நினைவுகளைச் சுமந்தபடி, தலைவன் தீட்டிய போர்த்திட்டம். தலைவனின் தளபதிகள் நிகழ்த்திய படைநகர்த்தல். கோவிலில் குண்டடித்து கோரம் செய்த 'புக்காரா'வை, கோவிலின் முற்றத்திலேயே காட்சிக்கு வைத்தனர் புலிகள். மக்களை வேட்டையாடக் குண்டிறக்கிய கப்பலை, காங்கேசன்துறையில் வேட்டையாடினர் புலிகள்.

பொங்கிக் குதித்தது தமிழினம். அழுது புலம்பிய முகங்களிலெல்லாம் ஆனந்தக் களிப்பு. இனம் புரியாத ஒரு இன்பச் சிலிர்ப்பு.

'புலிப்பாய்ச்சல்' தாக்குதல் - இருவேறு தரப்பினருக்கு, இருவேறு விதமான பாடங்களைப் புகட்டியிருக்கின்றது.

அடித்து விரட்டி, கொன்று குவித்து, தமிழினத்தை அடிமைகொண்டு ஆளலாம் என்ற பழைய வரலாறு இனி நீடிக்காது என்பதை, சிங்கள தேசத்திற்குப் புகட்டியிருக்கிறது.

அழிவுகளால் புலம்பி - அகதியாய் ஓடாமல், சொந்தப் பலத்தோடு எதிரியை எதிர்த்து விரட்டினால் மட்டுமே, நாம் நிரந்தர மகிழ்வோடு நிம்மதியாய் வாழலாம் என்பதைத் தமிழினத்திற்கும் புகட்டியிருக்கின்றது! ○

# படையெடுப்பை முறியடிக்க...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்று: இந்த இராணுவ வெற்றிக்குள் தனது அரசியல் பிரச்சினைகளை மறைத்து - சிங்கள தேசத்தைத் திருப்திப்படுத்தி - ஆட்சியைத் தொடர விரும்புகின்றது.

இரண்டு: அந்த இராணுவ வெற்றிமூலம் புலிகளைப் பலவீனப்படுத்தி - நிலங்களை ஆக்கிரமித்து - தமிழர் போராட்டத்தை வலுவிழக்கச் செய்ய விரும்புகின்றது.

சிங்கள அரசின் விருப்பம் எதுவாக இருந்தாலும், குடாநாடு மீதான படையெடுப்பை வெற்றிகரமாகச் செய்ய அரசுப் படைகளால் முடியுமா என்ற கேள்வியும் உள்ளது.

'மூன்றாம் ஈழப்போரில்' எமது போராட்டம் அடுத்தடுத்துப் பெற்ற பல இராணுவ வெற்றிகளாலும் அது கொடுத்த நம்பிக்கைகளாலும், பெருந்தொகையான தமிழ் இளைஞர்கள் புலிகளுடன் இணைந்துவிட்டனர்; இந்த நிலையில், புலிகளின் படைபலமும் கணிசமாக அதிகரித்துவிட்டது. இந்தப் படைபலத்தைக்கொண்டு உச்சப் பயன்பாட்டைப் பெறத்தக்க வகையில், போர்த் தயாரிப்புக்களையும் தகுந்த போர் உபாயங்களையும் தேர்ந்தெடுத்து - போராளிகளைப் பயிற்றுவித்து வைத்திருக்கும் தலைவர் அவர்கள், குடாநாடுமீதான படையெடுப்பை எதிர்கொள்ளத்தக்கவாறு புலிகளின் படையணிகளை தயார்ப்படுத்தியும் வைத்திருக்கின்றார். எனவே, குடாநாடு மீதான சிங்கள அரசின் படையெடுப்பு என்பது, சிங்களப் படைத்துறைக்கு கரும்பாக இருக்கப்போவதில்லை; இந்தக் கள யதார்த்தத்தை சிங்களத் தளபதிகளும் உணர்ந்தே உள்ளனர்.

ஆயினும், ஒரேநேரத்தில் பல முனைகளூடாகத் தமது துருப்புக்களை நகர்த்துவதன்மூலம் புலிகளின் ஆட்பலத்தைச் சிதறடிக்கலாம் - அதன்மூலம் வெற்றியைப் பெறலாம் - என்ற திட்டமும் அரசுப் படைகளின் தளபதிகளிடம் உண்டு. இதை நடைமுறைப்படுத்திப் பார்த்தால்தான், இதிலுள்ள ஆபத்தைச் சிங்களத் தளபதிகள் உணர்ந்துகொள்வர்!

எது எப்படியோ, சிங்களப் படைகளின் படைபலத்திற்கு இணையாக புலிகளின் படைபலமும் அதிகரிக்கப்பட வேண்டும் என்ற உண்மையைத் தமிழினம் மறந்துவிடலாகாது. எதிரியின் படைபலம் என்று கூறும்போது, குடாநாட்டைச் சூழ குவித்துவைக்கப்பட்டிருக்கும் எதிரியின் ஆட்பலத்தையும் - அவனது ஆயுதப் பலத்தையுமே குறிப்பிடுகின்றோம்.

எனவே, இதற்கு இணையாக புலிகளின் ஆட்பலமும் அதிகரிக்கப்படவேண்டும் - ஆயுதபலமும் உயர்த்தப்படவேண்டும். எமது இளைஞர்களும் இளம் பெண்களும், இந்த வரலாற்றுத் தேவையை ஈடுசெய்ய புலிகள் இயக்கத்துடன் மேலும் இணையவேண்டும். அதேவேளை, புலிகள் இயக்கத்தின் ஆயுத பலத்தை அதிகரிக்கச்செய்வதற்குப் பெருந்தொகையான பணம் புலிகளுக்குக் கிடைக்கச் செய்யவேண்டும். இந்த பணபலத்தை இயக்கத்திற்குக் கொடுக்கவேண்டிய வரலாற்றுக் கடமையும் எமது மக்களுக்கே உண்டு. இன்றைய போர் வாழ்வில் எமது மக்கள் பல்வேறு துன்பங்களை அனுபவித்தாலும் கூட, தங்களது சேமிப்பில் இருந்து ஒரு குறித்த பணத்தைப் போராட்ட நிதிக்கென வழங்க வேண்டிய அத்தியாவசியக் கடமை, அவர்களுக்கு உண்டு. இந்தக் கடமையை நாம் நிராகரித்தால், எமது அனைத்துச் சேமிப்புக்களும் - பரம்பரைச் சொத்துக்களும் - எதிரியால் அழிக்கப்பட வாய்ப்புக்கள் உண்டு.

எதிரியை குடாநாட்டுக்குள் முன்னேறிவர விட்டால், எமது மக்களின் உயிர்களும் அழியும்; எமது மக்களின் சொத்துக்களும் அழியும். எனவே, எதிரியை ஒரு அங்குல மேனும் முன்னோக்கி நகர விடக்கூடாது. இதைப் புலிகள் இயக்கத்தால் செய்ய முடியும். ஆனால், அதற்குத் தேவையானது இரண்டே இரண்டு விடயங்கள்தான். ஒன்று, ஆட்பலம்; மற்றையது பணபலம்.

இந்த இரண்டையும் புலிகள் இயக்கத்திற்கு வழங்கி, எம்மை நாமே பாதுகாத்து - எமது தேசத்தையும் விடுவிப்போம்! ○

www.eelamview.com


'முன்னோக்கிப் பாய்தல்' என்ற பெயரிலான, குடாநாடு மீதான சந்திரிகா அரசின் படையெடுப்பு ஏற்படுத்திய அவலங்களும் - அழிவுகளும், தமிழ் மக்களை ஒரு வரலாற்றுப் பீதிக்குள் ஆழ்த்தி இருந்தன. பாரிய இன அழிப்பு அபாயத்தால் சூழப்பட்டு - மக்கள் பய அதிர்ச்சிக்குள் சிக்கியிருந்த வேளையில்தான், அந்த வீர சாதனை நடந்தது.

இருள்சூழும் வேளைகளிலெல்லாம் ஒளியேற்றும் தலைவர் பிரபாகரன், முன்னோக்கிப் பாய்ந்தவர்களின் மீது புலிப்பாய்ச்சலை நிகழ்த்தி அவர்களைப் பின்வாங்கி ஓட வைத்தார் - மனம் இடிந்து போயிருந்த எமது மக்கள், இந்த வரலாற்று வெற்றியால் புதிய வேகங்கொண்டார்கள் - மீண்டும் ஒருமுறை தமிழரின் படைபலம், தமிழர்களுக்கு மகிழ்ச்சியையும் நம்பிக்கையையும் கொடுத்துள்ளது!



'முன்னேறிப் பாய்ந்து' உயிர் முன்னூறு கொன்றோரை புலியெனப் பாய்ந்து வீழ்த்தும் நெறியுரைக்கும் தலைவர்.

# 'முன்னோக்கிப் பாய்தல்' மீது 'புலிப்பாய்ச்சல்'




ராணுவம் நகர்ந்த பாதை    பலாலி இராணுவ தளம்

1. உலங்குவானூர்தி வீழ்த்தப்பட்டது.
2. 'டாங்கி' தகர்க்கப்பட்டது.
3. 'புக்காரா' வீழ்த்தப்பட்டது.
4. 'எடித்தரா' மூழ்கடிக்கப்பட்டது.
5. படை வண்டிகள் அழிக்கப்பட்டன

www.eelamview.com




முன்னைய அரசைப் போலவே தற்போதைய அரசும் குடாநாட்டைக் கைப்பற்றுவதிலேயே கண்ணுங் கருத்துமாக இருந்துவருகின்றது. முன்னைய அரசின் திட்டம்: குடாநாட்டைச் சூழ ஒரு இராணுவ முற்றுகையை இட்டு - புலிகளின் நகர்திறனைச் சிதைத்து - பின்னர் புலிகளை அழிப்பது ஆகும். இருந்தபோதிலும் இந்த முற்றுகை முயற்சி புலிகள் இயக்கத்தால் முறியடிக்கப்பட்டதால், தற்போதைய அரசு வேறொரு திட்டத்தைத் தயாரித்து வைத்திருக்கின்றது. அதாவது, யாழ்நகர் உட்பட, குடாநாட்டின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நகர்களைக் கைப்பற்றி, குடாநாட்டில் இருந்து புலிகளை அடித்து விரட்டுவதுடன் - புலிகளுடனான போரைப் பயன்படுத்தி கணிசமான தமிழ் மக்களைக் கொன்று - இனப்படுகொலை செய்து - தமிழ் மக்களின் போராட்ட உறுதியையும் நசுக்கிவிடுவதே, சந்திரிகா - ரத்வத்த அரசின் புதிய திட்டமாகும்.

இந்தப் புதிய திட்டத்தின் முதற்கட்டம் தான் சிங்களப் படைகள் நடாத்திய முன்னோக்கிப் பாய்தல் நடவடிக்கை ஆகும். சண்டிலிப்பாய் - சங்கானை - சித்தன்கேணி - சங்கரத்தை - சுழிபுரம் - பொன்னாலை - மூளாய் - வட்டுக்கோட்டைப் பகுதிகளைக் கைப்பற்றிவிட்டு, பின்னர், சண்டிலிப்பாய் ஊடாகவும் வட்டுக்கோட்டைப் பகுதியில் இருந்து அராலிக் கடற்கரை வழியாகவும் - இரண்டு முனைகளூடாக - யாழ். நகரத்தை நோக்கிப் படைகளை நகர்த்துவதே 'முன்னோக்கிப் பாய்தல்' நடவடிக்கையின் இறுதி இலக்காக இருந்தது. கொப்பேகடுவ தயாரித்து நடைமுறைப்படுத்த விரும்பிய திட்டமும் கிட்டத்தட்ட இதை ஒத்தது என்பது கவனிக்கத்தக்கது.

கொப்பேகடுவவும் அவரது திட்டமும் அராலிக் கண்ணியில் சிதறுண்டது போல, சந்திரிகா - ரத்வத்தவின் திட்டம் 'புலிப்பாய்ச்சலுடன்' புழுதியில் வீழ்ந்துவிட்டது. அன்று - குடாநாடு எதிர்கொள்ள இருந்த ஒரு அபாயத்தை அராலிக் கண்ணி தற்காலிகமாகத் தடுத்தது; அதே போல, இன்று - குடாநாடு சந்திக்க இருந்த ஒரு பேராபத்தை புலிப்பாய்ச்சல் தற்காலிகமாகத் தடுத்துள்ளது. இந்த தற்காலிகப் பாதுகாப்புக்களை நிரந்தரப் பாதுகாப்பாக மாற்ற வேண்டிய கடமை எமது இளைஞர் - யுவதிகளின் கைகளில்தான் தங்கியுள்ளது. அதாவது, புலிகள் இயக்கத்தின் ஆட்தொகையை அதிகரிப்பதன்மூலம் இந்த நிரந்தரப் பாதுகாப்பைத் தேடிக்கொள்ள முடியும்.

'ஒப்பறேசன் முன்னோக்கிப் பாய்தலில்' அரசுப்படைகள் கடைப்பிடித்த நகர்வு யுக்தியை 'U (யூ) வடிவத் தந்திரோபாயம்' என, சிங்களத் தளபதிகள் வர்ணித்துள்ளனர். அளவெட்டிப் பகுதியில் இருந்து சண்டிலிப்பாய் சிரணிச் சந்தியை நோக்கிய ஒரு நகர்வையும்; மாதகலில் இருந்து கடற்கரை ஓரமாக மூளாய், பொன்னாலை வழியாக வட்டுக்கோட்டை வரை அடுத்த நகர்வையும் சிங்களப் படைகள் செய்தன. இந்த இருமுனை நகர்வையும் இணைத்து - ஒரு வழங்கல் பாதையை ஏற்படுத்தவும் - அதன்மூலம் படையினரின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் என, சண்டிலிப்பாயில் இருந்து வட்டுக்கோட்டைவரையுள்ள சங்கானை - சித்தன்கேணி - சங்கரத்தை ஆகிய இடங்களையும் சிங்களப் படைகள் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தன.

ஆயினும் இந்த 'யூ வடிவ' இராணுவ நிலைகளின் ஒரு பகுதியான சண்டிலிப்பாய் - சங்கானை - அளவெட்டிப் பகுதிகள் மீது, 14.07.1995 அன்று அதிகாலை, U இனை நடுவில் பிளந்ததுபோல - நடந்த புலிப்பாய்ச்சலுடன், சிங்களப் படைகளின் படைநகர்வு வடிவம் சிதைவடைந்துவிட்டது.

'ஒப்பறேசன் முன்னோக்கிப் பாய்தல்' நடவடிக்கையின் வெற்றி பற்றிச் சிங்கள அரசு செய்த மிகைப்படுத்தப்பட்ட பிரச்சாரத்தால் ஆகர்சிக்கப்பட்ட சிங்கள மக்கள், தமது இனம் ஒரு வரலாற்று வெற்றியைப் பெற்றுவிட்டது போல எண்ணி மகிழ்ந்தனர். சூனியத்தில் பிறந்த இந்த மகிழ்ச்சி நெருப்பை சிங்களப் பத்திரிகைகள் நெய்வார்த்து வளர்த்தன. 'முன்னோக்கிப் பாய்தல்' இராணுவ நடவடிக்கை என்பது - 'புலிகள் தலையில் விழுந்த ஒரு குட்டு' என, டெய்லி நியூஸ் பத்திரிகை ஆசிரியர் தலையங்கம் எழுதி மகிழ்ந்தது. தாண்டிக்குளத்தில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினர் 'ஐஸ்கிறீம்' விநியோகித்து, தங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். சிங்கள தேசத்தின் மற்றைய இடங்களில் வெடிகொளுத்தி - இனிப்புப் பண்டங்களை வழங்கி - சிங்கள இனம் வெற்றியைக் கொண்டாடியது. கோட்டை இராச்சியத்தின் படைகள் யாழ்ப்பாண இராச்சியத்தைக் கைப்பற்றியது போன்ற உணர்வை சிங்கள மக்கள் பெற்றிருந்தனர் போலும்! பலாலிப் படைத்தளத்தைச் சேர்ந்த படையினரைத் தவிர மிகுதி அனைத்துச் சிங்களச் சிப்பாய்களும், தங்களை துட்டகைமுனுவின் மறு பிறப்புக்களாகவே எண்ணி மகிழ்ந்து இருந்தனர். ஆனால், 'புலிப்பாய்ச்சலின்' பின்னர் களநிலைமை வேறுவிதமாக மாறிவிட்டது என்ற உண்மையைச் சிங்கள இனம் அறிந்த பின்னர் என்ன செய்யப்போகின்றதோ தெரியவில்லை!

'முன்னோக்கிப் பாய்தல்' இராணுவ நடவடிக்கைக்கு சந்திரிகாவின் அரசியல் தலைமையும், ரத்வத்தவின் படைத் தலைமையும் சேர்ந்துசெய்த முன்னேற்பாடுகள் பிரம்மாண்டமானவை. இப்பாரிய முன்னேற்பாடுகளைக் கண்டு திருப்தியுற்ற ரத்வத்த சொன்னார், ''புலிகளுக்கெதிரான இராணுவ நடவடிக்கையை எமது படைகள் தொடங்கும்போது நாடே வியப்புறும்!'' இந்தப் படையெடுப்பிற்கான முன்னேற்பாடுகளில் பெரும் நம்பிக்கைகொண்ட சந்திரிகா அம்மையார் சொன்னார், ''இது சமாதானத்திற்கான போர்!'' போரின் வெற்றியில் நம்பிக்கைவைத்து இவ்வாறு போருக்கு வியாக்கியானம் கொடுத்தார். சந்திரிகா அம்மையாரும் ரத்வத்தவும் நம்பியதுபோலவே படையெடுப்பிற்கான ஏற்பாடுகளும் பாரிய அளவில் நடந்தன.

'முன்னோக்கிப் பாய்தல்' இராணுவ நடவடிக்கை தொடங்க முன்னர் 'எடித்தரா' கப்பல் ஊடாகவும், தரையிறக்கு கலங்கள் ஊடாகவும், 2400 தொன் எடையுடைய வெடிப்பொருட்களை - பிரதானமாக எறிகணை வகைகள் - காங்கேசன்துறை துறைமுகத்திற்கூடாக இறக்கப்பட்டிருந்தன (ஐலண்ட்-20.7.95). அதே வேளை 25 இற்கும் மேற்பட்ட ரஷ்யத் தயாரிப்பான டாங்கிகளும் - கவசவாகனங்களும் மேலதிகமாகப் பலாலிக்கு கடல்வழியாக அனுப்பிவைக்கப்பட்டன. இத்துடன் சிங்கள வான்படையும் விமான எதிர்ப்பு ஆயுதங்களுக்கு ஈடுகொடுக்கக்கூடிய ரஷ்யத் தயாரிப்பு விமானங்களை வாங்கிவைத்திருந்தது.

## ஒப்பறேசன் முன்னோக்கிப் பாய்தல்

09. 07. 1995 ஞாயிற்றுக்கிழமை, அளவெட்டிப் பகுதிக்கூடாகவும், மாதகல் பகுதிக்கூடாகவும் சிங்களப் படைகள் களத்தைத் திறந்தன. முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு பெருந்தொகையில் - பொதுமக்களது இடங்களை நோக்கி - சிங்களப் படைகள் எறிகணை வீச்சுக்களை நடாத்தின. மக்கள் இடம்பெயர்ந்து செல்வதற்குரிய அவகாசத்தையோ அல்லது இன்ன இடத்தால் இடம்பெயர்ந்து செல்லலாம் என்று ஒரு பிரதேசத்தையோ ஒதுக்காது, அனைத்துத் திசைகளிலும் - அப்பகுதியின் அனைத்துக் குக்கிராமங்கள்மீதும் - எறிகணைகளை மழையாகப் பொழிந்தனர். இதனால், அவலமான ஒரு அவசர இடப்பெயர்வுக்கு மக்கள் நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். எறிகணைச் சிதறல்கள்பட்டு இறந்த அல்லது காயமடைந்த தம் உறவுகளைக்கூட அந்தந்த இடத்திலேயே விட்டுச் செல்லும் அளவுக்கு, எறிகணை வீச்சுக்களின் கோரமும் - அவை கொடுத்த அதிர்ச்சியும் மக்களை வெகுவாகப் பாதித்தன. தம் கண்களுக்கு முன்னாலேயே தம் உறவுகளைப் பறிகொடுத்ததுடன் - காயமடைந்த உறவுகளைப் பாதுகாக்கவோ அல்லது அப்புறப்படுத்தவோ முடியாத அவலத்தை மக்கள் அனுபவித்தனர். இராணுவ நடவடிக்கை நடைபெற்ற பகுதிக்கு அப்பாலும் - எதுவித இராணுவ நோக்கமும் இல்லாமல் - சிங்களப் படைகள் எறிகணை வீச்சில் ஈடுபட்டன. ''புலிகளிடமிருந்து எதிர்ப்புக்களைக் காணவில்லை'' என்று அரசே அறிக்கைவிட்டது. அப்படியாயின் ஏன் அந்த எறிகணை மழையை அரசுப் படைகள் பொழிந்தன? இங்கேதான் ஒரு விடயம் தெளிவாகத் தெரியவருகின்றது. அதாவது... 'முன்னோக்கிப் பாய்தல்' இராணுவ நடவடிக்கையின் இலக்குகளில், தமிழ் மக்களின் அழிவும் - இடப்பெயர்வும் அடங்கியிருந்தன என்பதே அதுவாகும்.

இந்த இராணுவ நடவடிக்கையின்போது சிங்கள வான்படையின் சுப்பசொனிக்கும் - புக்காரா விமானங்களும்-உலங்குவானூர்திகளும், தரையில் நகர்ந்த படையினருக்கு உதவும் வகையில் தாக்குதல்களில் ஈடுபட்டன. புக்காராவும் - சுப்பசொனிக் விமானமும் 8,000 அடிக்கு மேலே நின்று குண்டு வீச்சுக்களில் ஈடுபட்டன. இதனால் இந்தக் குண்டுவீச்சு விமானங்கள் போர்முனைப் பகுதியில் குண்டுகளை வீசுவதைவிட, அதற்கு அப்பால் மக்கள் தஞ்சமடைந்த பகுதிகளிலேயே குண்டுவீச்சுக்களை நடாத்தின. அதன்காரணமாக என்றுமில்லாத அளவுக்கு, விமானக் குண்டுவீச்சுக்களால் அப்பாவி மக்கள் படுகொலை செய்யப்பட்டனர். நவாலி தேவாலயத்தின்மீது நடந்த விமானத் தாக்குதலில் 120 இற்கு மேற்பட்ட மக்கள் பலியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை, தரையில் நகர்ந்த படையினருக்கு உதவியாக அவர்களுக்கு மேல் பறந்துகொண்டிருந்த உலங்குவானூர்திகள், நகர்வின் திசையையும் இடங்களையும் மற்றும் புலிகளின் நடமாட்டங்களையும் அவதானித்துடன், காயமடைந்த படையினரை ஏற்றும் பணியிலும் ஈடுபட்டிருந்தன.

இந்த இராணுவ நடவடிக்கையின்போது இரண்டு உலங்குவானூர்திகள் தாக்கப்பட்டிருந்ததாக அரசுப் படைகள் ஏற்றுக்கொண்டுள்ளன. அதில் ஒன்று பலத்த சேதத்திற்கு உள்ளாகி - பறக்க முடியாது - மாதகலில் அவசர தரையிறக்கத்துக்கு முயன்றபோது விழுந்து நொருங்கியதாக, கொழும்புப் பத்திரிகையொன்று ('சண்டே ரைம்ஸ்' - 16. 07. 1995) தெரிவித்தது.

ஏறக்குறைய பத்தாயிரம் விசேட பயிற்சி பெற்ற படையினர் நன்கு ஆயுதமயப்படுத்தப்பட்ட நிலையில் - இந்த இராணுவ நடவடிக்கையில் பங்குகொண்டனர். பாரிய இழப்புக்கள் எதையும் அவர்கள் சந்திக்காததால், யாழ் நகர் நோக்கிய அடுத்த நகர்விற்காக சிங்களப் படைகள் ஆவலுடன் காத்திருந்தன. 'படை நகர்வு சுலபமாக அமைந்துவிட்டது என்றும் யாழ். நகரிலிருந்து 7 கிலோமீற்றர் தொலைவிலேயே படைகள் நிற்கின்றன' என்றும் அறிவிப்பு போர்முனையில் இருந்து சென்றபோது, சந்திரிகா அரசு பேருவகை அடைந்திருக்கவேண்டும்! இதன் விளைவாக இன்னும் சில நாட்களில் தீர்வுத்திட்டம் பகிரங்கப்படுத்தப்படும் என, நீதி அமைச்சர் பீரிஸ் அறிக்கையும் விடுத்தார்; யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிவிட்டு தமிழ் இனத்தின்மீது அரைகுறைத் தீர்வுத்திட்டம் ஒன்றைத் திணிப்பதற்காக, அரசு காத்திருந்தது.

'முன்னோக்கிப் பாய்தல்' இராணுவ நடவடிக்கை தொடங்கிய நாளில் இருந்து ஒவ்வொரு நாளும், 'ரூபவாகினி'யும் சிறீலங்கா



www.eelamview.com

ஒலிபரப்புக் கூட்டுத்தாபனமும், போர்பற்றிய வர்ணனைகளை வெகு டாம்பீகமாகக் கொடுத்துக்கொண்டே இருந்தன. ஆனால் 14ஆம் திகதியுடன், இந்த விசேட ஒளி - ஒலிபரப்புக்கள் திடீரென முன்னறிவித்தல்கள் இன்றி நின்றுபோய்விட்டன. அன்றிலிருந்து சிங்கள தேசத்தில் பல வதந்திகள் உலாவத் தொடங்கின. அதை மறுப்பதிலும் போர்க்கள நிலைமைகளை மறைப்பதிலுமே, ரூபவாகினியும் - ஒலிபரப்புக் கூட்டுத்தாபனமும் ஈடுபட்டன.

## புலிப்பாய்ச்சல் நடவடிக்கை

'ஒப்பரேசன் முன்னோக்கிப் பாய்தலி'ன் போது சிங்களப் படைகள் கைப்பற்றிய பரந்த நிலப்பகுதி - அதில் கொல்லப்பட்ட மக்கள் தொகை - இடம்பெயர்ந்தோர் எண்ணிக்கை மற்றும் கண்மூடித்தனமான எறிகணை, வான் தாக்குதல்களாலும் குடாநாட்டு மக்கள் பீதியடைந்த நிலையிலேயே காணப்பட்டனர். இன்றோ நாளையோ யாழ். நகரம் சிங்களப் படைகளிடம் வீழ்ந்துவிடுமோ என்ற பய உணர்வே, குடாநாட்டு மக்களை ஆட்டிப்படைத்தது. இந்த நிலையில்தான் சிங்களப் படைகளின் இராணுவ நடவடிக்கைக்கு தக்க பதிலடி ஒன்று கொடுக்க, தலைவர் ஆயத்தங்களைச் செய்தார். புலிவீரர்களின் பாரிய படையணி ஒன்றை ஒருபெரும் எதிர்த்தாக்குதல் ஒன்றுக்காகத் தயார்பபடுத்தினார். சண்டிலிப்பாய் - அளவெட்டிப் பகுதிகளில் நிலைகொண்டபடி, யாழ்நகரை நோக்கிய அடுத்த கட்ட நகர்விற்காகக் காத்திருந்த படையினர்மீது, 14. 07. 1995 அன்று அதிகாலை, புலிவீரர்கள் ஒரு பெருந்தாக்குதலைத் தொடுத்தனர். தலைவரின் நேரடி நெறிப்படுத்தலில் நடந்த இந்தப் பதில் இராணுவ நடவடிக்கைக்கு 'புலிப்பாய்ச்சல்' எனத் தலைவரே பெயர் சூட்டினார். பெயரிற்கேற்றாற்போல புலிவீரர்கள் சிங்களப் படைமீது பாய்ந்து, அதைத் துவம்சம் செய்தனர்! பகல்போல நிலவு இருந்த அந்த இரவில், புலிவீரர்கள் துணிகரமான முறையில் தொடுத்த புலிப்பாய்ச்சல் நடவடிக்கையால், 'முன்னேறிப்பாய்தலில்' பங்குகொண்ட படையினர் சிதறிப் பின்னோக்கி ஓடினர்! அவர்களது கட்டளைப்பீடமும் - விநியோக மார்க்கமும் சிதைந்துபோயின; நூறிற்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டனர். அத்துடன் தரைப்படைக்குத் துணையாகக் குண்டு வீச்சில் ஈடுபட்டபடி - சிங்களச் சிப்பாய்களின் போரிடும் உறுதியை ஊக்குவித்துக்கொண்டிருந்த புக்காரா குண்டுவீச்சு விமானம் அவர்களின் கண்முன்னாலேயே சுட்டுவீழ்த்தப்பட்டதால், சிங்களப் படைகளின் நம்பிக்கையும் சிதறிப் போனது.

இதேவேளை, 'முன்னோக்கிப் பாய்தல்' இராணுவ நடவடிக்கைக்குத் தேவையான விநியோகங்களைச்செய்துகொண்டிருந்த 'எடித்தரா' என்ற கட்டளைக் கப்பல், காங்கேசன்துறை துறைமுகத்தில்வைத்து, 16. 07. 1995 அன்று அதிகாலை, கரும்புலித் தாக்குதல்மூலம் மூழ்கடிக்கப்பட்டது. 2628 தொன் நிறையுடைய இந்தக் கட்டளைக் கப்பலை சிங்கள அரசு இழந்ததால், 'முன்னோக்கிப் பாய்தலின்' விநியோக வழியும் மூடப்பட்டுவிட்டது.

இவ்விதம், 'முன்னோக்கிப் பாய்தல்' நடவடிக்கைக்காக மூன்று போர் அரங்குகளிலும் பங்குகொண்டிருந்த சிறீலங்காவின் முப்படைகளும, புலிப்பாய்ச்சலுக்கு இலக்காகிப் பாரிய அழிவுகளைச் சந்தித்தன. இதனால், 'முன்னோக்கிப் பாய்தல்' பலத்த பின்னடைவைச் சந்தித்தது.

'புலிப்பாய்ச்சல்' நடவடிக்கையின் வேகத்தையும் - வீரியத்தையும் - அது சிங்களப் படைகளுக்குக் கொடுத்த இழப்புக்களையும் கணிப்பீடு செய்த சிங்களத் தளபதிகள், தமது 'முன்னோக்கிப் பாய்தல்' நடவடிக்கையை நிறுத்தி, கைப்பற்றப்பட்ட பகுதிகளில் இருந்து விரைவாகப் பின்வாங்க முடிவெடுத்தனர்.




புலிகளின் பாரிய சேனை ஒன்றை மிக விரைவாக ஒன்றிணைத்து, தாக்குதல் வியூகங்களையும் - தந்திரோபாயங்களையும் அவர்களுக்கு விளக்கி, மூவகைப் போர் அரங்குகளிலும், ஒழுங்கான முறையில், தலைவர் அவர்கள் படைநகர்த்தலையும் - தாக்குதல்களையும் செய்வித்த விதம், சிங்களத் தளபதிகளை வியப்பிற்குள்ளாக்கியிருக்கும்.

## புலிப்பாய்ச்சலின் விளைவுகள்

புலிகள் இயக்கம் பெயர்சூட்டி நடாத்திய தாக்குதல்கள் எல்லாவற்றுக்குள்ளும் 'புலிப்பாய்ச்சல்' தனித்துவம் மிக்கதாக இருக்கின்றது. அதற்குக் காரணம், மூன்று போர் அரங்குகளிலும் ( தரை - கடல் - வான் ) 'புலிப்பாய்ச்சல்' நடாத்தப்பட்டதே ஆகும். அத்துடன், பீதியுற்றிருந்த குடாநாட்டு மக்களின் மனங்களில் நம்பிக்கை விதையைத் தூவிய சமராகவும் 'புலிப்பாய்ச்சல்' அமைந்துவிட்டது. அதே வேளை, குடாநாட்டைக் கைப்பற்றும் எண்ணத்துடன் சிங்களப் படைத்துறைத் தலைமை வரைந்த ஓர் போர்த்திட்டத்தை, 'புலிப்பாய்ச்சல்' மறுபரிசீலனை செய்யவைத்துவிட்டது.

'புலிப்பாய்ச்சலி'ன்போது புக்காரா குண்டு வீச்சு விமானம் ஒன்றும் - சக்திவாய்ந்த கட்டளைக் கப்பல் ஒன்றும் அழிக்கப்பட்டுவிட்டன. தனித்த ஒரு விமானம், தனிய ஒரு கப்பல் என்றில்லாமல் சிங்கள வான்படைக்கும் கடற்படைக்கும் இந்த இழப்புக்கள் பெரிய பாதிப்புக்களைக் கொடுத்துள்ளன. ஏனெனில், புலிகளின் விமான எதிர்ப்பு ஆயுதங்களில் இருந்து பாதுகாப்புத் தேடுவதற்காகவே, 8,000 அடிக்கு மேலே நின்று விமானங்கள் குண்டுவீசின. அத்துடன் இத்தகைய விமான எதிர்ப்பு ஆயுதங்களை ஆபதது நிறைந்த போர்முனைக்கு புலிகள் எடுத்துவரமாட்டார்கள் என்ற ஒரு நம்பிக்கையும், சிங்களத் தளபதிகளுக்கு இருந்தது. அதனால்தான் சமர்க்களததுககு மேலேயே பறந்துதிரிவதில் அக்கறை காட்டின. ஆனால், சிங்கள வான்படையின் அந்த நம்பிக்கையும் - முற்பாதுகாபபும் பொய்த்துவிட்டன. இதனால், இனிவரும் சமர்களில் எப்படித் தமது பங்கை ஆற்றுவது என்று, சிங்கள வான்படை குழம்பிய படி உளளது.

இதேபோன்றுதான் சிங்களக் கடற்படையும் திகைத்தபடி உள்ளது. பூரண பாதுகாப்பு நிறைந்த ஒரு துறைமுகத்தில் - அதுவும் சமர் நடைபெற்றுக்கொண்டிருந்த பகுதியில் - கடற்புலிகளின் துணையுடன் வெற்றிகரமாக உட்புகுந்து கடற்கரும்புலிகள் நடாத்திய தாக்குதலில், வடபுலக் கடலில் நம்பிக்கை நட்சத்திரமான 'எடித்தரா' மூழ்கிவிட்டது. கரும்புலிகளின் மற்றைய படகு விபத்துக்குள்ளானதால், அதன் இலக்கான தரையிறக்கு கலம் தப்பிப் பிழைத்துவிட்டது. இதேவேளை, காங்கேசன்துறை துறைமுகத்தில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த எட்டு 'டோறா' சண்டைப் படகுகளுடன் கடற்புலிகள் நடாத்திய சிலமணிநேரக் கடற்சண்டையும், ஒரு முக்கிய இராணுவ பரிமாணத்தைப் பெற்றுவிட்டது. ஒரு டோறா படகைக் கொண்டு வடபுலக் கடற்பரப்பையே கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்த சிங்களக் கடற்படை, இப்போது, எட்டு டோறாப் படகுகளை ஒருங்கே வைத்துக்கொண்டும் ஒரு கட்டளைக் கப்பலைப் பாதுகாக்க முடியாதுபோய்விட்டது. 'எடித்தரா'வின் இழப்புடன், வடபுலக்கடற்பரப்பு மீதானகண்காணிப்பும் - வடபுலப் படை முகாம்களுக்கான விநியோகமும் பெரும் பாதிப்பைச் சந்தித்துள்ளன. சுருக்கமாகச் சொன்னால், 'புலிப்பாய்ச்சலின்' விளைவால், சிங்கள அரசின் முப்படைகளினது நகர்திறனும் கடுமையாகச் சேதப்பட்டுவிட்டது.

இதேவேளை, மரபுவழிப் போர்முறையில் புலிகளுடன் போரிட்டால் அரசுப் படைகள் பாரிய வெற்றியைப் பெற்றுக்கொள்ளலாம் என்ற நம்பிக்கை, இராணுவத் தலைமைக்கு உண்டு. பெரியதொரு ஆட்பலத்தைக்கொண்ட தங்களது முப்படைப் பலமும் - அதற்கு இருக்கும் பாரிய படைக்கல சக்தியும் அந்த நம்பிக்கைக்குப் பிரதான காரணம் ஆகும். 'முன்னோக்கிப் பாய்தல்' நடவடிக்கையிலும் பத்தாயிரத்திற்கும் அதிகமான படையினர் பங்குகொண்டிருந்தனர். அதில் பயன்படுத்தப்பட்ட படைக்கல சக்தியின் அளவு ( எறிகணைகள் - ரவைகள் - விமானக் குண்டுகள் ) உண்மையில் பாரியதாகும். ஆனாலும், படையினரால் சமரை வெல்ல முடியவில்லை. எனவே, மரபுவழிப் போர்முறைமூலம் இடங்களைக் கைப்பற்றுதல் என்பதுபோல, கைப்பற்றப்பட்ட இடங்களைப் பாதுகாத்துக்கொள்வது என்பதும் மிக முக்கியமானதாகின்றது. புலிவீரர்களின்போர்த்திறனும்-போர்த் தந்திரங்களும் கைப்பற்றப்பட்ட இடங்களில் இருந்து படையினரை விரட்டியடித்துவிட்டன. ஆயினும், சிங்களப் படைகளின் ஆட்தொகைக்கு புலிப்படையின் ஆட்தொகையும் ஈடுகொடுக்காதுவிட்டால், நிரந்தர வெற்றியைப் புலிப்படை பெறமுடியாதுபோய்விடும். எனவே, இனிவரும் சமர்களில் புலிகள் இயக்கம் வெற்றிபெறவேண்டுமாயின், அதன் ஆட்பலம் அதிகரிக்கப்பட்டேயாகவேண்டும்.




புலிகள் இயக்கத்திற்கான ஆட்தொகையின் அவசியத்தைப் பொறுத்தளவில் போரின் வளர்ச்சிக் கட்டத்தை அது சுட்டிக்காட்டுவதுடன், வெற்றியின் இன்றியமையாத தேவையாகவும் அது மாறிவிட்டது!

## வளர்ச்சியும் வெற்றியும்

14. 07. 1991 அன்று, சிங்களப் படையின் ஒரு வெற்றிகரமான கடல்வழித் தரையிறக்கம் வெற்றிலைக்கேணியில் நடந்தது. அந்தத் தரையிறக்கத்துடன், ஆனையிறவுத் தளம் மீது புலிவீரர்கள் நடாத்திய தாக்குதலின் போக்கு திசைமாறி, சிங்களப் படைகளுக்குச் சாதகமாக மாறிவிட்டது.

அதேபோல, சரியாக 4 வருடங்களுக்குப் பின்னர், 14. 07. 1995 அன்று சண்டிலிப்பாய் - அளவெட்டிப் பகுதியில் புலிவீரர்கள் செய்த 'புலிப்பாய்ச்சலால்' சிங்களப் படைகளின் ஒரு இராணுவ நடவடிக்கையே சிதறடிக்கப்பட்டுவிட்டது! O



**பாய்ச்சலைத் தயார்ப்படுத்தித் திட்டமிடும் தளபதிகள் (இடது); பாய்ந்திடத் தயாராகி அணிவகுக்கும் புலிகள் (வலது).**

www.eelamview.com

# வீட்டுக்கு ஒருவர் இயக்கத்தில் இருந்தால்

# நாட்டுக்கும் பாதுகாப்பு; வீட்டுக்கும் பெருமை!



குடாநாட்டைச் சூழ நான்கு பெரிய படைத்தளங்கள் உண்டு. இந்த நான்கு படைத் தளங்களிலும் இப்போது சுமார் முப்பதாயிரம் (30,000) படையாட்கள் உண்டு. நவாலியில், சண்டிலிப்பாய் - அளவெட்டியில் செய்ததைப்போல குடாநாட்டைக் கைப்பற்றித் துவம்சம் செய்யவெனப் படையினர் காத்திருக்கின்றனர்.

01. ஆனையிறவு - வெற்றிலைக்கேணி கூட்டுத்தளத்தில் சுமார் ஆறாயிரம் (6,000) படையினர் உள்ளனர்.

02. பலாலிப் பெருந்தளத்தில் இப்போது சுமார் பதினைந்தாயிரம் (15,000) படையினர் உண்டு (இவர்களில் சுமார் ஐயாயிரம் பேர் கிழக்கு மாகாணத்திலிருந்து படையெடுப்பிற்காகக் கொண்டுவரப்பட்டவர்கள்).

03. காரைநகர் கடற்தளம் மற்றும் மண்டைதீவு உட்பட தீவகம் முழுவதிலும், சுமார் ஐயாயிரம் (5,000) படையினர் உள்ளனர்.

04. பூநகரிப் படைத்தளத்தில் சுமார் நான்காயிரம் (4,000) படையினர் உண்டு.

எனவே, மொத்தம்முப்பதாயிரம் (30,000)படையினர் குடாநாட்டின் மீது பாய எந்தநேரமும் தயாராக இருக்கின்றனர்.

இதேவேளை, குடாநாட்டில் சுமார் எட்டு இலட்சம் மக்கள் வாழ்கின்றனர் (எட்டு இலட்சம் மக்கள் - முப்பதாயிரம் ஆமி).

அதாவது, குடாநாட்டைப் பொறுத்தளவில், 27 மக்களுக்கு ஒரு இராணுவம் (27:1) என்ற வீதத்தில் நிலைமை உள்ளது.

27 தமிழர்கள் சேர்ந்து ஒரு இராணுவத்தை அடித்துக் கொன்றால், குடாநாடு முழுவதிலுமுள்ள படையினர் அழிந்துவிடுவர். இது முடியாததா?

வயதுபோனவர்களையும், குழந்தைகளையும் சேர்த்து இப்படி ஒரு போர்க்கணக்குப் பார்க்கமுடியுமா என்று, யாராவது கேட்கலாம். சரி, இன்னொரு முறையில் இந்தக் கணக்கைப் பார்ப்போம். குடாநாட்டு மக்களின் எண்ணிக்கையில் எங்களது அம்மா - அப்பா, சிறியவர்களான தம்பி - தங்கைகள் மற்றும் குழந்தைகளையும், தாத்தா - பாட்டி, அம்மம்மா, அப்பம்மாக்களையும் கழித்துவிட்டுக் கணக்கைப் பார்ப்போம். குடாநாட்டில் சுமார் 2 லட்சம் சிறுவர் - சிறுமியர் - குழந்தைகள் உள்ளனர். அதேவேளை சுமார் 3 இலட்சம் அம்மா - அப்பா, தாத்தா - பாட்டிகளும் உள்ளனர். அதாவது மொத்தம் 5 இலட்சம் பேர் இராணுவத்துடன் போரிட முடியாதவர்களாக இருப்பர்: எனவே மிகுதி 3 இலட்சம் இளம் இரத்தம் மிஞ்சும். இவர்கள் 16 வயதிற்கு மேற்பட்ட இளைஞர்களும் இளம் பெண்களுமாவார்கள்.

எனவே, எதிரிப் படையெடுப்பை எதிர்கொண்டு முறியடிக்கக்கூடிய உடற் தகுதியும் - மனத்துணிவும் கொண்ட 3 இலட்சம் இளைஞர்கள் குடாநாட்டில் உள்ளனர். ஆனால் இராணுவத்திலோ, ஆக முப்பதினாயிரம் மட்டும்தான். பத்துத் தமிழ் இளைஞர்களுக்கு ஒரு இராணுவம் (10:1) உண்டு.

ஒவ்வொரு பத்துத் தமிழ் இளைஞர்களும் ஒன்றாகச் சென்று, ஒரு ஆமியை உலக்கையாலும் கற்களாலும் அடித்துக் கொல்லத் தொடங்கினால், குடாநாட்டிலுள்ள முழு இராணுவமும் அழிந்துவிடும். அதைவிட்டுவிட்டு பெரியவர்கள் - பெண்கள் - குழந்தைகளுடன் சேர்ந்து, இந்த இளம் இரத்தங்களும் இடம்பெயர்ந்தோடி அகதி முகாம்களில் வாழ்வதால், என்ன பயன் ஏற்படும்?

இந்த இளம் இரத்தங்கள் அகதி முகாம்களில் வசிப்பதற்குப் பதிலாக புலிகளின் பாசறையில் வசிக்கத் தொடங்கினால், எமது மண்ணில் அகதி முகாம்களே இருக்க முடியாதே! எமது குடும்பங்கள் அவல வாழ்வு வாழவும் தேவையில்லையே!

இஸ்ரேலிய நாட்டை அமைக்கப் போராடிய யூத இன மக்கள் இப்படித்தான் போராடி - வென்றார்கள். அங்கே வயது முதிர்ந்தவர்களையும் - சிறுவர்களையும் தவிர மிகுதி அனைத்துப்பேரும் எதிரிக்கு எதிராகப் போராடியே, தமது மண்ணையும் தம்மையும் பாதுகாத்தார்கள். யூத இளைஞர்கள் செய்ததை ஏன் தமிழ் இளைஞர்கள் செய்ய முடியாது?

இந்த அறிக்கையை வாசிப்பவர்களில், போராளி குடும்பத்தையும் மாவீரர் குடும்பத்தையும் சேராத மற்றைய குடும்பங்களிலுள்ள இளைஞர்கள், சற்று யோசிக்க வேண்டும். உனது வீட்டின் பாதுகாப்பிற்காக - உனது நாட்டின் பாதுகாப்பிற்காக நீ என்ன செய்யப் போகின்றாய்? உடனடியாகவே இயக்கத்தில் இணைந்து உனது நாட்டிற்கான கடமையை செய்யபபோகின்றாயா? அல்லது மற்றைய இளைஞர் யுவதிகளின் உயிர்த் தியாகங்களில் நீயும் - உனது வீட்டாரும் குளிர்காயப்போகின்றீர்களா? பிறருடைய உழைப்பல் தியாகத்தில் நீயும் உனது குடும்பமும் நன்மை பெற முயல்வது சரியல்லவே! அது சரியென நினைத்து உனது போராட்டப் பங்களிப்பை வழங்காது இருந்தால் - ஒருநாள் உனது மனச்சாட்சியே உன்னைத் தண்டிக்கும்; உனது பரம்பரையும் உன்னை நிந்திக்கும்,

எனவே, போராளி குடும்பத்தை அல்லது மாவீரர் குடும்பத்தைச் சாராத மற்றைய குடும்பத்தைச் சேர்ந்த, 16 வயதிற்குமேற்பட்ட யாராவது ஒருவர் இப்போதே தன்னை இயக்கத்தில் இணைத்துக்கொள்ள வேண்டும். குடாநாடு முழுவதிலுமுள்ள அரசியற் துறையினரின் கோட்ட, வட்ட, சிற்றூர் அலுவலகங்கள் புலிகள் இயக்கத்தின் உத்தியோகபூர்வ ஆட்சேர்ப்புநிலையங்களாக இயங்குகின்றன; அங்கேபோய் இயக்கத்தில் இணைந்துகொள்ளவும். பெரியப்பாவின் மகன் இயக்கத்தில் இருக்கின்றார் மாமாவின் மகன் இயக்கத்தில் இருக்கின்றார் என்று சாட்டுககள் கூறித் தப்பித்துக்கொள்வதை உனது மனச்சாட்சியே அனுமதிக்கமாட்டாது.

16 வயதுக்கு மேற்பட்ட ஒரு இளைஞன் அல்லது இளம்பெண் வீதியால் நடந்து செல்லும்போது, ''எங்களது குடும்பத்தில் யாராவது ஒருவர் இயக்கத்தில் இருக்கிறாரா?'' என உங்களையே கேட்டுப் பாருங்கள். அவ்விதம் இயக்கத்தில் இருந்தால், வீதியின் வலதுபுறத்தால் - தலை நிமிர்ந்து நடவுங்கள்; சைக்கிளில் செல்வதானால், வீதியின் இடதுபுறத்தால் கம்பீரமாக ஓட்டிச் செல்லுங்கள். உங்களது குடும்பத்தில் எவருமே இயக்கத்தில் இல்லையென்றால் - உனது வயதும் 16 இற்கு மேல் என்றால் - உடனடியாகவே இயக்கத்தில் வந்து இணைந்துவிடு இல்லையென்றால் திருவள்ளுவர் கூறியது போல...... 'சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.' அதாவது மற்றவர்களது வசவுகளைக் கேட்டு நீயும் உனது குடும்பமும் துன்பப்படவேண்டி வரலாம்!




ஆகவே,

வீட்டுக்கு ஒருவர் இயக்கத்தில்இருந்தால் நாட்டுக்கும் பாதுகாப்பு; வீட்டுக்கும் பெருமை!

'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்'

# யார், இடம்பெயர்ந்து ஓடவேண்டும்-

# எமது மக்களா? சிங்களப் படைகளா?

உலகமே வியந்து பார்க்கும் ஒரு உன்னத தலைவன், இன்று எமது இனத்திற்கு உண்டு; அந்த வரலாற்றுத் தலைவனின் வழிகாட்டலிலும் - நெறிப்படுத்தலின் கீழும் சிறப்பாகப் படை நடாத்தக்கூடிய திறமையான தளபதிகள் எம்மிடம் உண்டு; எதிரியிடம் இருந்து கைப்பற்றிய கணிசமான ஆயுதங்கள் உண்டு; அத்துடன் சிறந்த போர்த் திட்டங்களும் அதற்கே உரிய தந்திரோபாயங்களும் புலிகளிடம் உண்டு. ஆயினும், போதியளவு ஆட்தொகை இயக்கத்திடம் இல்லாதபடியால், மேற்குறித்த அற்புத வளங்களின் உயர் பயனை எமது தேசம் பெறமுடியாது இருக்கின்றது. இதேவேளை, தேவையான இந்த ஆட்பலத்தை இயக்கத்திற்கு வழங்கும் சக்தி, எமது இனத்திற்குத் தாராளமாக உண்டு என்பதும் கவனிக்கத்தக்கது.

இன்று எமது மக்கள் அனுபவிக்கும் அவல வாழ்வுக்கும் - துயர நிகழ்ச்சிகளுக்கும் பிரதான காரணம், தமிழரின் படைபலத்திற்கு இருக்கும் ஆட்பற்றாக்குறைதான். இந்த ஆட்பற்றாக்குறையின் ஒரு விளைவுதான், அண்மையில் ஏற்பட்ட 300 இற்கும் மேற்பட்ட மக்களின் அவலச் சாவுகளும் - 3 இலட்சம் மக்களின் இடப்பெயர்வும் ஆகும். இத்தகைய துயர வாழ்வு தொடராது தடுப்பதற்குரிய நேரம் வந்துவிட்டது. அடுத்த இராணுவ நடவடிக்கையை எதிரிப் படைகள் ஆரம்பிக்க முன்னர், புலிகள் இயக்கத்தின் ஆள் எண்ணிக்கையை உடனடியாகவே அதிகரிக்கச் செய்யவேண்டும்.

சிங்களப் படைகளுடனான போர், இன்று ஒரு புதிய பரிமாணத்தை எட்டிவிட்டது. அதாவது, எமது ஊர்களை ஆக்கிரமிக்கும் நோக்குடன் ஒரு இராணுவ நடவடிக்கையை சிங்களப் படைகள் மேற்கொள்ளும்போது, இதைத் தடுத்து நிறுத்த, புலிகள் இயக்கமும் ஒரு பதில் இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டிய கட்டாயத்தேவை ஏற்படுகின்றது. இந்த நிலையில், சிங்களப் படையும் தமிழர் படையும் நேருக்கு நேர் மோதும் மரபுவழிச் சமராக விடுதலைப் போர் மாற்றமடைகின்றது.

மரபுவழிச் சமரில் ஆயுத பலத்தைப் போன்று ஆட்பலமும் முக்கிய இடத்தை வகிக்கின்றது. எதிரியின் கடற்பலத்தையும் - வான் ஆதிக்கத்தையும் கணிசமான அளவுக்குக் கட்டுப்படுத்தும் வலு புலிகள் இயக்கத்திற்கு இருப்பதால், ஆயுத பலத்தில் சமநிலை காணும் வாய்ப்பு, ஓரளவுக்கேனும் உண்டு. அதேவேளை, எமது போராளிகளின் போர்த்திறனும் - எமது போர்முறைகளும் எதிரியினதைவிட மேலோங்கி நிற்பதால், எதிரியின் ஆயுதபலத்தை ஓரளவாவது எம்மால் சமாளிக்க முடிகின்றது.







ஆனால், ஆட்பலத்தைப் பொறுத்தளவில், சிங்களப் படையுடன் ஒப்பிடும்போது நாம் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே உள்ளோம். எனவே, சிங்களப் படையின் ஆட்பலத்திற்கு இணையாக, ஓரளவிற்கேனும் புலிகளின் ஆட்பலமும் அதிகரிக்கப்பட்டால்தான், எதிரியின் படையெடுப்பில் இருந்து எமது மண்ணையும் - எமது மக்களையும் பாதுகாக்க முடியும். இல்லையேல், இப்போது நடந்துள்ளதைப்போல அழிவுகளையும் அவலங்களையும் சிங்கள அரசு, தவணைமுறைப் பரிசாக தமிழ் மக்களுக்கு வழங்கிவிடலாம்.

'ஒப்பறேசன் முன்னோக்கிப் பாய்தலை' அரசுப் படைகள் ஆரம்பிக்க முன்னர், குடாநாட்டில் சுமார் 30,000 படையினர் குவித்து வைக்கப்பட்டிருந்தனர். ஆனையிறவு - வெற்றிலைக்கேணி கூட்டுத் தளம், பலாலிப் பெருந்தளம், காரைநகர் கடற்படைத்தளம், மண்டைதீவு இராணுவ தளம், பூநகரிப் படைத்தளம் ஆகிய இடங்களில் இந்த 30, 000 படையினரும் நிலைகொண்டிருந்தனர். இந்த நிலையில் ஒரு இராணுவ நடவடிக்கையை அரசுப் படைகள் மேற்கொள்ள இருக்கின்றன என்று அறிந்துகொண்டாலுங்கூட, எந்தத் தளத்திலிருந்து - எந்த முனையூடாக அந்தப் படையெடுப்பு நிகழப் போகின்றது எனக் கண்டறிவது சிரமம். இந்தச் சிரமத்தைத் தீர்க்க சுலபமான வழி ஒன்று

(8ஆம் பக்கம் பார்க்க)

# பிணந்தின்னிக் கழுகாக "சமாதானப் புறா"!




"சந்திரிகா என்றால் சமத்துவத்தின் மறு வடிவம்" என்று, தமிழர்களைச் சுற்றியிருந்த மாயை, கடந்த 9 ஆம் திகதியோடு முற்றாகக் கலைந்துவிட்டது.

"சமாதானப் புறா" என்று தமிழினம் நம்பியிருந்த அந்தப் பெருந் தலைவி, ஒரு யுத்த வெறிபிடித்த, இரத்த தாகம் கொண்ட பிணந் தின்னும் கழுகு என்பதை, கடைசித் தடவையாக அன்றைய நாள் நிரூபித்துவிட்டது.

"சமரசம்! சமத்துவம்!! சமநீதி!!!" என்று சர்வதேசமெங்கும் குரலெழுப்பிய அதே சம நேரத்திலேயே, தமிழனின் கழுத்தறுக்கக் கொலைவாள் தீட்டிக்கொண்ட போர் வெறியர் கூட்டம்தான் சந்திரிகாவும் மந்திரிகளும் என்பது, அன்றைய நாளில், முற்றுமுழுதாகவே வெளிப்படையாகிவிட்டது.

போர் ஆரம்பித்தபோது "புலிகளை மீளவும் அரசியல் பேச்சுவார்த்தைக்குக் கொண்டு வருவதற்கான இராணுவ அணுகுமுறை" என்றவர்கள் - யாழ்ப்பாணப் படை எடுப்பை ஆரம்பித்துவிட்டு, "இனிமேல் புலிகளோடு பேசுவதற்கு எம்மிடம் எதுவுமே இல்லை" என்று கூறிவிட்டார்கள்.

'ஒப்பறேசன் லீப் போவேட்' -

இனவெறி பிடித்த, சிங்களப் பேரினவாத உள்ளக்கிடக்கைகளை, வரலாற்றில் இன்னொரு தடவை வெட்ட வெளிச்சமாக்கிய "முன்னோக்கிப் பாய்தல்", "யாழ்ப்பாண மக்களைப் - புலிப்பயங்கரவாதிகளின் கோரப் பிடியிலிருந்து மீட்டெடுப்பதற்காக" சந்திரிகாவின் முப்படைகளும் அரங்கேற்றிய மாபெரும் தமிழினப் படுகொலை.

வெட்டிச் சரித்த விறகு கட்டைகளின் குவியல்களாக, பிய்த்தெறியப்பட்ட பிணங்களினால், யாழ். வைத்தியசாலையின் வெளி நோயாளர் பிரிவையே நிறையச்செய்த "சமாதானத்திற்கான போர்"

பீரங்கிக்குண்டுகளும் விமானக் குண்டுகளும் எங்கள் மேனிகளின் மீது நர்த்தனமாடின. எங்கள் ஊர்மனைகளை உருக்குலைத்தன. நூற்றுக்கணக்கில் நாங்கள் படுகொலை செய்யப்பட்டோம். கை கால்களை இழந்து ஊனமாக்கப்பட்டோம். உடுத்த உடைகளுடன், கையில் எடுத்த பொருட்களுடன், இலட்சக்கணக்கில் நாங்கள் வீடு வாசல்களை விட்டு விரட்டியடிக்கப்பட்டோம். மிகப் பெரிய ஒரு பேரபாயம் எங்கள் மீது ஏவிவிடப்பட்டது. இப்போதும், எங்களை இலக்கு வைத்துள்ள ஒரு பேராபத்தால் நாங்கள் சூழப்பட்டுத்தான் உள்ளோம்.

கல்விக்குப் பெருமதிப்புக் கொடுக்கும் பண்பைக் கொண்டது எங்கள் இனம். தமிழ்ச் சமூகத்தின் சிறப்பியல்புகளில் அதுவும் ஒன்று. சிங்களப் பேரினவாத அடிவேரில் முளைவிட்ட ஒரு புத்திஜீவிப் பேரினவாதி என்ற யதார்த்தத்தை மறந்து, சந்திரிகாவின் கல்வியறிவில் அது மதிமயங்கியது. மேற்குலகப் படிப்பு அவரை மேன்மை நிலையில் செயற்பட வைக்கும் என எண்ணியது. அவரது வாய்மொழிகளிற்கு வசப்பட்டு, வித்தியாசமான சிந்தனைப் போக்குடைய ஒரு மாறுபட்ட சிங்களத் தலைவர் என, அப்பாவித்தனமாக நம்பியது. பேரினவாதப் பூர்வீகமாக இருப்பினும், முற்போக்கான எண்ணங்களுடன் சமரசத்தை உலாவச் செய்யப்போகின்ற ஒரு மாமேதை என, அவாவோடு காத்திருந்தது. இவற்றோடு - துப்பாக்கிக் குண்டுக்குத் துணைவனைப் பறிகொடுத்த அவரது வாழ்க்கைப் பின்னணிக்காக இரக்கப்பட்டது. அவர் ஒரு பெண்ணாகவும் இருந்தது இரக்கத்தை இரட்டிப்பாக்கியது; தமக்காகவும் அவர் இரக்கப்படுவார் என நம்பியது.

ஆனால், தமிழ்ச் சமூகத்தின் இந்தக் கற்பனை ஆசைகளுக்குத் தலைகீழாக அந்த அறிவுப் பேரழகி, எம் இனத்தை அடக்கி - அடிமை கொண்டு - அழித்தொழிப்பதற்கான வியூகங்களைத்தான் வகுத்துக்கொண்டிருந்தார் என்பதை எங்கள் சமூகம் விளங்கிக்கொள்ள, காலம் சற்றுப் பிந்தியபோது......

அட்டூழியம்... ! அக்கிரமம் ...! அராஜகம் ......!யாழ்ப்பாணத்து வழிதெருவெங்கும் வழிந்தோடியது குருதி .. ! திரும்பிய பக்கமெல்லாம் அழிவு......! வீசிய காற்றெல்லாம் பிண வாடை ......!

எதுவெல்லாம் இனிமேல் நடந்துவிடாது என்று தமிழ்ச் சமூகம் ஐயமற நம்பியதோ - இரத்தத்தாலும், கண்ணீராலும் எழுதப்பட்ட வரலாற்றின் இன்னுமொரு அத்தியாயமாக - அவையெல்லாம் திரும்பவும் நடந்துவிட்டன.

சிங்களத் தலைவர்களது அரசியல் வாழ்வின் உயிர்நாடியாகி, காலமொரு ஆட்சியும், பொழுதொரு தலைமையுமாக பூதாகரமாக உருவெடுத்துவரும் பௌத்த பேரினவாதத்தின் இன்றைய முகமே தான் என்பதை, அந்த "சமத்துவத் தலைவி" ஐயம் திரிபற நிரூபித்துவிட்டார்.

பல பத்தாண்டு காலமாக - தமிழினத்தைத் தனக்குக் கீழ்ப்பட்ட ஒரு இனமாக அடக்கி, அடிமை கொண்டு, அழித்தொழிக்க முனையும் சிங்கள தேசமானது, இனி எக்காலத்திலுமே - தமிழனை அழித்தொழிக்கும் தனது நோக்கத்தினைக் கைவிட்டு - எம்மோடு சமரசத்திற்கு வந்து நீதி வழங்கப்போவதில்லை என்பது, சந்திரிகா அம்மையாரின் வாயிலாகவும் எமக்கு உணர்த்தப்பட்டுவிட்டது.

இப்போது, தமிழ் சமூகத்தின் முன்னால் இருக்கின்ற கேள்வி ஒன்றே ஒன்றுதான் -

தமிழினத்தின் சுபீட்சத்திற்கான போராட்டத்தோடு முழுமையாக இணைந்து, எங்களது நிம்மதியையும் - மகிழ்ச்சியையும் பெற்றெடுத்து, சுதந்திரத்தை வென்றெடுக்கப் போகின்றோமா? அல்லது, பீரங்கிக் குண்டுகளின் ஈவு இரக்கமற்ற சிதறல்களுக்குள் சிக்கி, குடும்பம் குடும்பமாக செத்தொழியப் போகின்றோமா ?

வயது வேறுபாட்டுக்கு அப்பால், பால் வேறுபாட்டுக்கு அப்பால், வர்க்க வேறுபாட்டுக்கு அப்பால், கல்வி நிலை வேறுபாட்டுக்கு அப்பால், கருத்து வேறுபாடுகளுக்கும் அப்பால்- தமிழினத்தின் ஒவ்வொரு தனிமனித மனச்சாட்சியின் அறிவுரீதியான சிந்திப்பை நோக்கியும், இந்த ஒரு கேள்வியே சுட்டுவிரலை நீட்டியபடி உள்ளது. ○

## யார், இடம்பெயர்ந்து...

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

உண்டு. அதாவது, அனைத்துப் படைத்தளங்களின் எதிரேயும் தேவையான அளவு போராளிகளை நிறுத்தி படையெடுப்பை எதிர்கொள்வதே அதுவாகும். ஆனால், அவ்விதம் செய்வதற்குத் தேவையான ஆட்பலம் எமது இயக்கத்திடம் இல்லை. எனவே, அதிமுக்கியமான சில இராணுவ கேந்திரங்களில் அல்லது படையெடுப்பு நடக்கலாம் எனச் சந்தேகிக்கும் ஒருசில இடங்களில் எமது போராளிகளை நிறுத்திவைத்துக் கொண்டு காத்திருப்பதைத் தவிர, எமக்கு வேறு வழிகள் இல்லை. எமது இயக்கம் எதிர்கொண்டு நிற்கும் இந்த ஆட்பற்றாக்குறையை எமது மக்களுக்குப் பகிரங்கமாகக் கூறி, இதைத் தீர்ப்பதற்காக. இளைஞர்களும் - இளம் பெண்களும் இயக்கத்தில் இணைய முன்வரவேண்டும் என்று, பல மாதங்களாக அழைப்பு விடுத்துவந்தோம். ஆயினும், எமது அவசர வேண்டுகோளின் முக்கியத்துவத்தை எமது இளம் சமூகம் புரிந்துகொள்ளவில்லை. எமது இளம் சமூகம் காட்டிய அக்கறையீனத்தையும் - அதனால் எமது இயக்கம் சந்தித்த ஆட்பற்றாக்குறையையும் எதிரி தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டான்.

'ஒப்பறேசன் முன்னோக்கிப் பாய்தலு'க்கான தொடக்க இடத்தை இவ்விதமே எதிரிப் படை தேர்ந்தெடுத்தது. எண்ணிக்கையில் குறைந்தளவு போராளிகள் நிலைகொண்டிருந்த ஒரு பகுதியூடாக, 09.07.1995 அன்று, சிங்களப் படைகள் 'முன்னோக்கிப் பாய்ந்து' களத்தைத் திறந்தன. அந்த முனையூடாக தனது 10, 000 வீரர்களை, மிகவிரைவாக எதிரித் தளபதிகள் எமது ஊர்களுக்குள் நகரச் செய்தனர். இந்தப் பாரிய சைனியத்தைத் தடுத்து நிறுத்தும் வலு, அங்கே நிலைகொண்டிருந்த எமது சிறிய அணிக்கு இருக்கவில்லை. மற்றைய கேந்திர நிலைகளில் நிலைகொண்டிருந்த புலிவீரர்களை குறித்த போர்முனைக்கு நகர்த்து முன்னர், கணிசமான பகுதி நிலத்தை எதிரிப் படைகள் சுலபமாகக் கைப்பற்றிவிட்டன. ஆயினும், எதிரிப் படைகள் கைப்பற்றிய ஊர்களுக்கு முன்னால் திரண்ட எமது படையணிகள் தம்மை நன்கு தயார்ப்படுத்திக்கொண்டு, 14.07.1995 அன்று அதிகாலை, 'புலிப்பாய்ச்சலை' ஆரம்பித்தன. ஆயிரக்கணக்கான புலிவீரர்கள் சண்டிலிப்பாய், அளவெட்டிப் பகுதிக்குள் திடீரென நுழைந்து, அங்கே நிலைகொண்டிருந்த படையினரைத் தாக்கத் தொடங்கிய போது, பலாலிப் பெருந்தளத்தின் பழைய நிலைகளை நோக்கி சிங்களப் படைகள் சிதறி ஓடின. அன்றைய தினம் எமது இயக்கத்திடம் போதியளவு போராளிகள் இருந்திருப்பார்களானால், பலாலிப் பெருந்தளத்தில் நிலைகொண்டிருந்த அனைத்துப் படையினருக்கும் சமாதி கட்டி, அந்தப் பெரும் நிலத்தை மீட்டெடுத்து, மக்களிடம் ஒப்படைத்திருக்க முடியும்.

அதேபோல, சுமார் 1, 000 புலிவீரர்கள், 28.06.1995 அன்று மண்டைதீவுக்குள் புகுந்து தாக்குதலைத் தொடங்கியபோது, சிங்களப் படைகள் வேலணை தாண்டி ஊர்காவற்றுறை நோக்கிச் சிதறி ஓடின. அன்றைய தினம், எமது இயக்கத்திடம் போதியளவு ஆட்பலம் இருந்திருக்குமேயானால், ஊர்காவற்றுறையில் வைத்து எதிரிப் படைகளை அழித்து, மண்டைதீவு - ஊர்காவற்றுறை நிலப்பகுதியை முழுமையாக விடுவித்து. அப்பகுதியில் எமது போராளிகளை நிலைகொள்ளச் செய்திருக்க முடியும்; அதன் பின்னால் மக்களும் தமது வீடுகளுக்குச் சென்றிருக்க முடியும். ஆயினும் இந்த இரண்டு நிகழ்ச்சிகளும் நடைபெறவேயில்லை. ஏனெனில், எமது இயக்கத்திடம் அதற்கேற்ற ஆட்பலம் இருக்கவில்லை. இதனால், அழியும் நிலையில் இருந்த படைமுகாம்கள் மீண்டும் உயிர்பெற்று - நிலைகொண்டு எமது மண்ணை ஆக்கிரமித்து வைத்திருக்க முடிகின்றது; எதிரிக்கு அது முடிகின்றது என்பதைவிட, எமது இளம் சமூகம் அதை அனுமதித்துள்ளது என்பதே சரியானதாகும்.

இப்போது மீண்டும் ஒரு 'முன்னோக்கிப் பாய்தலுக்கு' சிங்களப் படைகள் தயாராகின்றன. இனி நடைபெறப்போகும் சிங்களப் படைகளின் பாய்ச்சல், வடமராட்சி மீதோ அல்லது தென்மராட்சி மீதோ அல்லது அச்சுவேலிப் பகுதிக்கூடாக கோப்பாய் நோக்கியோ அல்லது மண்டைதீவில் இருந்து நல்லூர் - கொக்குவில் நோக்கியோ நடைபெற வாய்ப்புக்கள் உண்டு.

எமது இயக்கத்திடம் கணிசமான அளவு ஆட்பலம் உண்டு. ஆயினும் அந்த ஆட்பலம் தமிழீழம் எங்கும் பரந்து கிடக்கின்றது. மட்டக்களப்பு, திருக்கோணமலை, முல்லைத்தீவு, வன்னி, மன்னார் என்று எல்லா மாவட்டங்களிலும் சிங்களப் படைகளுக்கு எதிராக புலிவீரர்கள் போர்புரிந்துகொண்டு இருக்கின்றார்கள். அதே வேளை, கணிசமான போராளிகள் நிருவாக வேலைகளிலும் ஈடுபட்டபடி உள்ளனர். இதனால், யாழ். குடாநாட்டில் ஒரு குறித்த தொகையுடைய போராளிகளே முழுநேரமாகக் களத்தில் நிற்கின்றனர். இந்தச் சிறு தொகையை வைத்துக்கொண்டு சிங்களப் படைகளின் பாரிய படையெடுப்பைத் தடுக்க முடியாது.

இதேவேளை, குடாநாட்டில், போராடக் கூடிய வலுவுடன் இருக்கும் இலட்சக்கணக்கான இளைஞர்கள் நாட்டுப்பற்று இல்லாமலும் - பயத்தாலும் எதிரியின் படையெடுப்பைத் தடுக்க முன்வராது வீணே இருக்கின்றனர். இவர்கள் இயக்கத்தில் வந்து இணைவார்களானால், குடாநாட்டிலுள்ள சிங்கள இராணுவத்தினர் ஓட்டமும் - நீச்சலுமாக தத்தம் ஊர்போய்ச் சேர்ந்திடுவர். அப்படி நடக்காமல்விட்டு, அதற்கு மாறாக எமது ஊர்களுக்குள் இராணுவம் புகுந்தால், முதலில் அவர்களின் கொலைவெறிக்கு உள்ளாவது எமது இளைஞர்களும் - இளம் பெண்களும்தான் என்பதை எவரும் சொல்லத் தேவையில்லை.

எனவே, எதிரியின் படையெடுப்பைத் தடுக்கவும் - எமது ஊரவர்களும் எமது குடும்பத்தினரும் இடம்பெயர்ந்து ஓடி அவல வாழ்வு வாழ்வதைத் தடுக்கவும் இயக்கத்திற்கு ஆட்பலம் தேவை. 16 வயதிற்கு மேற்பட்ட இளைஞர்கள் உடனடியாகவே அரசியல்துறையினரின் கோட்ட, வட்ட, சிற்றூர் செயலகங்களிற்கு வந்து இயக்கத்தில் இணைந்துகொள்ளும்படி, உரிமையுடன் அழைக்கின்றோம!

**எமது மக்கள் அகதிகளாவதா? அல்லது எதிரியை அகதியாக்கி ஓடவைப்பதா?**

'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்' ○

www.eelamview.com

# மனிதமுக யுத்தத்தின் யதார்த்தம்!

இனப்பிரச்சினைக்கு இராணுவ ரீதியிலல்லாது அரசியல் வழிமுறையிலேயே தீர்வுகாணப்பட வேண்டும்; அதற்கு அரசியற் தீர்வுத் திட்டம் தன்னிடம் உண்டு; பின்னர் அது மக்களுக்கு அறிவிக்கப்படும் என்றெல்லாம், 1994 ஆவணிப் பொதுத்தேர்தலுக்கான பரப்புரையின்போது சந்திரிகா அம்மையார் தெரிவித்தார்.

தன்னை ஒரு '' சமாதானப் புறா '' வாகவே உலகிற்குக் காட்டினார்.

ஆனால், ஒரு வருடம் நிறைவுறப்போகும் இத்தருணம்வரை, அந்த ''அரசியற் தீர்வுத்திட்டம்'' அவரால் வெளியிடப்படவில்லை! அதுமட்டுமல்லாது, '' சமாதானப் புறா '' வேடத்தைக் கலைத்து, ' இரத்தவெறிக் கழுகு ' என்ற தனது சுயரூபத்தையும் காட்டத் தொடங்கினார்.

''யுத்தத்தின்மூலம் சமாதானம்'' என்று போர்ப்பறை முழக்கத் தொடங்கினார். ''அரசியற்தீர்வை இப்போது வெளியிடவேண்டிய சூழல் இல்லை'' என்றும் சொன்னார்; கூட்டணியின் நீலன் திருச்செல்வம் போன்றோரும் இதற்கு அங்கீகாரம் வழங்கினர்.

'' புலிகளிடமிருந்து தமிழ் மக்களை விடுவிப்பதற்கே யுத்தம்; இது தமிழர்களுக்கு எதிரானதல்ல '' என்றும் சந்திரிகா சொன்னார்.

'' மனித உரிமைக் காவலர்கள்'' என்று கொழும்பிலிருந்து இதுவரை பாசாங்கு பண்ணிவந்த, ' மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர்கள் ( யாழ்ப்பாணம் ) ' என்ற அமைப்பு - தனது 08. 05. 1995 ஆம் திகதிய அறிக்கையில், ' புலிகளுக்கு எதிர்ப்பு - சந்திரிகாவிற்கு ஆதரவு ' என்ற சுய நிலைப்பாட்டைக் காட்டியது; '' மனித உரிமைக்கு '' இராணுவச் சாயத்தைத் தெளித்தது!

'' மனித முகத்துடன் யுத்தம்'' என்ற கோஷம் உரத்த குரலில் பரப்பப்பட்டது.

09. 07. 1995 இல் முன்னோக்கிப் பாய்தல் நடவடிக்கைமூலம், '' மனித முகத்துடன்கூடிய யுத்தம் '' சந்திரிகாவால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

• •

## பல்நூற்றுக்கணக்கான ஷெல் தாக்குதல்கள்

பல்நூற்றுக்கணக்கான ' ஆட்டிலறி ஷெல்கள் ' யாழ். குடாநாட்டின் அரைவாசிப் பகுதியை அதிரவைத்தன. இதுவரை இல்லாதவாறு பெருந்தொகையான தொடர் ஷெல் தாக்குதல்கள் மக்களைக் கலவரப்படுத்தி, உயிர் அச்சம் கொள்ளச்செய்தன. பலரின் உயிரைக் காவுகொண்டதோடு, மனித அங்கங்களைச் சிதைத்தன; வாழிடங்களையும் உடைமைகளையும் சேதப்படுத்தின. பாதுகாப்புத் தேடி மக்கள் இடம்பெயரத் தொடங்கினர். அளவெட்டியிலும் மாதகலிலும் சண்டை தொடங்கி நடந்தவேளையில், எங்கோ தொலைவில் இருந்த மானிப்பாய், ஆனைக்கோட்டை, யாழ்ப்பாணம் போன்ற இடங்களிலும் ஷெல்கள் வீழ்ந்து வெடித்தன! ஷெல்லுக்கு நேரடியான - குறிப்பான - இலக்கு எதுவுமில்லை. அடுத்தடுத்த நாட்களும் இவ்வாறுதான் நிகழ்ந்தன. '' யுத்தம் தமிழ் மக்களுக்கு எதிரானதல்ல '' என்ற சந்திரிகாவின் பொன்மொழிகளும் இந்தச் ஷெல்லடிகளினால் சிதறி உருக்குலைந்து போயின!

## விமானக் குண்டுவீச்சுகள்

புலிகளின் விமான எதிர்ப்பு ஏவுகணைகளுக்கு அஞ்சிய ' புக்காரா 'வும் ' சுப்பசொனிக் 'கும் கண்காணமுடியாத உயரத்தில் - முகில்களிடையில் மறைந்தபடி குண்டுகளைப் பொழிந்தன. தமது வாழ்விடங்களில் - தெருக்களில் - அடைக்கலந் தேடிய தேவாலயங்கள், கோவில்களில் - இக்குண்டுவீச்சுக்கள் தமிழ் மக்களைக் கொன்றொழித்தன; குறை உயிரில் துடிக்கச் செய்தன. நவாலி ' சென் பீற்றர்ஸ்' தேவாலயத்தில் கூடியிருந்த அபலைச் சனங்கள் மீது 'சந்திரிகாவின் புக்காரா' வீசிய எட்டுக் குண்டுகள், கொடூரத்தின் உச்சம் எதுவென்பதை உலகிற்குக் காட்டின. 141 அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்பட்டதோடு, 180 இற்கு மேற்பட்டோர் படுகாயங்களுக்கும் உள்ளாக்கப்பட்டனர். எங்கும் மனிதத் தசைத் துண்டங்கள், பெருகிய இரத்தம், அரைகுறை உயிருடன் கத்தும் வேதனைக் குரல்கள்...... ''ஐயோ, என்ர பிள்ளை... என்ர பிள்ளை ......'' எனக் கதறும் தாய் தந்தையர்; சகோதரங்களைத் தேடும் உடன்பிறப்புக்கள்...... பெற்றோரைப் பறிகொடுத்த பிள்ளைகள்...... கட்டடச் சிதைவுகளிலும் மரங்களிலும் சிதறியபடி, காகங்கள் கொத்தித் தின்னும் நிலையில் மனிதத் தசைத் துண்டங்கள் ...... '' வருந்திச் சுமைசுமக்கிறவர்களே என்னண்டை வாருங்கள்'' என்ற தேவனின் ஆலயத்தில் தஞ்சம் தேடிய மக்கள் - புலிகள்; தேவனின் புனித ஆலயம் - புலிகளின் பாசறை என்பவைதான், சந்திரிகாவின், ''மனிதமுகத்துடன் கூடிய '' யுத்த அகராதியில் எழுதப்பட்டிருக்கும் புதிய விளக்கங்கள் போலும்!



தாயே .....!
குடியிருப்பிலிருந்து உனைக் குடியெழுப்பியது யார்?
இருப்பிடத்திலிருந்து. உனை இடம்பெயர்த்தியது எது?
அவலப்பட்டு ஓடிவந்து நீ அவதிப்பட்டது ஏன்?
போகட்டுமம்மா .. விடு......
மரத்தின் வேரோடு தலைசாய்த்து ஆறும்
இனத்தின் வேரே......! நிம்மதியாய்த் தூங்கு!
இனி -
உன் விழுதுகள் தலை சாய்க்கா!

தூக்கிய முடிச்சோடு உன்னை
துரத்தியடித்தவர்களை - அவர்கள்
துப்பாக்கிகளால் துரத்தியடிப்பார்கள்!

நாளை ஒரு நாளில் -
உன்னைப் போலவே உன் பேரர்களும்
இதே மரநிழலில் இளைப்பாறுவர்!
ஆனால் -
சோகம் அப்பிய முகத்தோடு அல்ல;
வீரம் சுரக்கும் நெஞ்சோடு......
துயரத்தின் சுமையோடு அல்ல;
துவக்குகளின் பலத்தோடு!

## நாடோடிகளாய் இடம்பெயர்தல்

ஷெல்லடிகள், விமானக் குண்டுவீச்சுக்கள், பீரங்கித் தாக்குதல்கள் என்பவற்றால் ஏற்பட்ட அழிவுகள் - பீதிச் சூழல் மக்களைக் கலவரப்படுத்தின. தாம் வாழ்ந்த வாழ்விடங்களை - ஊர்களை விட்டு நீங்கி நெடுந்தொலைவிற்கு நகரச் செய்தன. உயிரைக் காப்பாற்றினால் போதும் என்ற நிலையில், கையில் அகப்பட்டதை எடுத்துக்கொண்டு, அப்பாவிப் பொது மக்கள் அவசரத்துடன் இடம்பெயர்ந்தனர். வாழ்நாள் முழுதும் தேடிய சொத்துக்கள் பலவற்றைக் கைவிட்டு - தவிப்புடன் அவர்கள் வெளியேறினர். முதியவர்களையும் நோயாளிகளையும் அப்புறப்படுத்த எவ்வளவு கஷ்டப்பட்டார்கள்! இயலாத நிலையில் அழுதுகுழறியபடி, அவர்களை அப்படியே விட்டு ஓட நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். பீதியில் கத்தும் குழந்தைகளை அணைத்துத் தேற்றியபடி - சைக்கிள்களிலும் மாட்டு வண்டிகளிலும் ' பெட்டி பைகளுடன் ' அநாதைகளாக இடம்பெயர்ந்தார்கள். வாகனம் ஏதும் இல்லாதவர்கள் கால்நடையாக..... சாமான்களைக் காவியபடி...... தெருவெல்லாம் ' நாடோடிகளைப் போல் ' மக்கள் கூட்டம். குழந்தையைத் தவறவிட்ட பெற்றோர், கணவனைப் பிரிந்த மனைவி, கையில் கொண்டுவந்த சிறு தொகைப் பொருட்களையும் பதற்றத்தில் தொலைத்தவர்கள் என.... அவலத்தைச் சுமந்தபடி - மூன்று இலட்சம் வரையான மக்களின் பாரிய இடப்பெயர்வு...... சொந்த இல்லிடங்களிலிருந்து யுத்தத்தால் பெயர்க்கப்பட்டவர்கள் - தொலைவிலுள்ள பாடசாலைகள், தேவாலயங்கள், கோவில்களில் 'ஒதுங்க' இடந்தேடிய நிலையில் - நாளாந்த உணவுக்கும் தேவைக்கும் மற்றவர்களின ' இரக்கத்தை ' எதிர்பார்க்கும் நிலைக்குத் தள்ளிவிடப்பட்டார்கள். ' முன்னோக்கிப் பாய்தலின் ' வேகம் இவர்களது வாழ்வின் இருப்பையே பெயர்த்து ஒதுக்கிவிட்டது!

## சூறையாடும் படைவீரர்

குண்டுவீச்சுக்களும் ஷெல்லடிகளும் வீடுகளையும் சொத்துக்களையும் சிதைத்தது போக, ஆக்கிரமித்த பகுதிகளில் - மக்களில்லாத வீடுகளை உடைத்துப் படையினர் கொள்ளையடித்தார்கள். தமிழர்களை '' விடுவிக்க '' வந்ததாகச் சொல்லப்பட்ட படையினர், தமிழர்களின் ' உயிர்களையும் சொத்துக்களையும்தான் அவர்களிடமிருந்து விடுவித்துச் ' சென்றுள்ளார்கள்! பல கோடி ரூபா பெறுமதியான பொருட்களைச் சூறையாடியவர்கள்தான், சந்திரிகாவின், '' சமாதானத்திற்கான யுத்தத்தின் '' படைவீரர்கள்!

## மனித விரோத முகம்

'' மனித முகத்துடன்கூடிய யுத்தம் '' உண்மையில், மனித விரோதமான மிகப் பெரிய அழிவுகளைத்தான் தமிழ் மக்களுக்குக் கொண்டுவந்தது. 300 பேர் வரை உயிரிழந்திருப்பதோடு, ஆயிரம் பேர் வரை படுகாயங்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். புனித இடங்களான தேவாலயங்கள், கோவில்கள், பாடசாலைகள் மட்டுமல்ல - உயிர்காக்கும் நிலையங்களான மருத்துவமனைகளும் '' சமாதானத்திற்கான யுத்தத்தின் '' படைவீரரால் சேதப்படுத்தப்பட்டன. மானிப்பாய் மருத்துவமனை குண்டுவீச்சுக்களானது; மூளாய் கூட்டுறவு மருத்துவமனை உடைத்துச் சேதப்படுத்தப்பட்டது. 55, 000 மாணவர்கள் இடம்பெயர்ந்ததாக கல்வி அதிகாரிகள் கூறுகின்றனர்; அண்மித்து வரும் க. பொ. த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் ஏராளமான மாணவரும் இதனுள் அடங்குகின்றனர். இப் பயங்கரச் சூழ்நிலையும் அழிவுகளும் இவர்கள் மீது ஏற்படுத்திய உளப்பாதிப்புக்கள், இவர்களின் கல்வியைப் பின்னடைவிற்கு உள்ளாக்கப்போகிறது. அரசு ஊழியர்களான 10 ஆசிரியர்களும், மூன்று கிராமசேவகரும் கொல்லப்பட்டுள்ளனர். அரசு நடத்தும் யுத்தத்தில் - அதனுடைய தமிழ் ஊழியர்களும் தப்பமுடியாது என்ற நிலை! 9 ஆம் திகதி அரசினால் அறிவிக்கப்பட்ட ஊரடங்கு உத்தரவு, 21 ஆம் திகதியே நீக்கப்பட்டது; 12 நாட்களாக மக்களின் ' சிவில்' வாழ்க்கை, சட்டபூர்வமாகவும் முடக்கப்பட்டது. தனித்தனி ஆட்களின் மனித உரிமை பற்றி அவ்வப்போது சில அமைப்புக்களால் ' கதைக்கப்படுவது' வழக்கம்! ; தமிழ் மக்கள் மீதான இந்தக் ' கூட்டு மனித உரிமை மீறல்கள்' குறித்து, இவையெல்லாம் என்ன சொல்லப் போகின்றன?

## இரக்கமேயற்ற வரலாறு

1956 ஆனியில், கொழும்பு காலிமுகத் திடலில், தனிச் சிங்களச் சட்டத்திற்கெதிராகத் தமிழர்கள் அமைதிவழியில் சத்தியாக்கிரகம் செய்தபோது, சிங்களக் காடையர்களால் தாக்கப்பட்டனர். காயத்திலிருந்து இரத்தம் வழிய நாடாளுமன்றம் சென்ற தமிழ் உறுப்பினரைப் பார்த்து, பிரதமர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா, '' விழுப்புண்கள்......!'' என்று கேலிசெய்தார்.

1958 இனப்படுகொலையின் போது தமிழர்கள் நாடெங்கும் கொல்லப்பட்டுக்கொண்டிருக்கையில், இதே பண்டாரநாயக்கா சொன்னார், '' அவர்கள் அனுபவிக்கட்டும்......''

1983 இன் மாபெரும் இனப்படுகொலையின்போது - தமிழ் மக்களுக்கு ஓர் அனுதாபச் சொல்கூடக் கூறாது ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா தனது 'ரூபவாகினி'ப் பேச்சில் கூறினார், '' இது சிங்கள மக்களின் இயல்பான எழுச்சி!'' -

இப்போது சந்திரிகா கேட்கிறார், '' யாழ்நகர் மீது ஷெல்கள் வீழ்கின்றனவா !''

சிங்களப் பேரினவாதத் தலைவர்களிற்கு, தமிழ் மக்களின் துயரங்கள் - அவலங்கள் என்றும் ஒரு பொருட்டே அல்ல! அவர்கள் அவற்றைக் கண்டு கைகொட்டி மகிழ்வார்கள் - மௌனம் சாதிப்பார்கள் - தொடர்ந்தும் தமிழர்களை அழிப்பதற்குத் திட்டங்கள் தீட்டிச் செயற்படுவார்கள்; இதுதான் வரலாறு.

இவர்களிடமிருந்து இரக்கத்தையோ அனுதாபத்தையோ நாம் எதிர்பார்க்க முடியாது. நாம் வலியவர்களாக மாறிச் சேர்ந்து போராடினால் வாழ்வோம்; இல்லையேல் அவர்களால் அழிக்கப்பட்டுவிடுவோம்! ○

www.eelamview.com

# காங்கேசன்துறை: புலி பாய்ந்த கடல்!

நரேஸ்;

*பிரபாகரனையே பிரமிக்கச்செய்த அவரது தலைசிறந்த படைவீரர்களுள் ஒருவன்.*

புலிகளின் ஆற்றல்மிகு கடற் போர்த் தளபதி.

கிளாலிக் கடற்சமர் அரங்கில் மாவீரன் சாள்ஸ் களப்பலியாகிய பின்னரே, கடற்புலிகளின் தாக்குதற் படைத் தளபதியாகப் பொறுப் பேற்றபோதிலும் -

கடற்புலிகளின் சரித்திரத்தில் மிகப்பெரும் பகுதியோடு, நரேஸ் பின்னிப் பிணைந்தவனாகவே உள்ளான்.

'' கடற்புலிகளின் சிறப்புத் தளபதிபோல இயங்கியவன் அவன்தான் '' என்கிறார், கடற்புலிகளின் சிறப்புத் தளபதி.



**லெப். கேணல் நரேஸ்**
*(சிவராஜசிங்கம் நவராஜன்)*
*திருக்கோணமலை.*

கண்களில் நீர்வழிய நீர்வழிய நாங்கள் மண் அள்ளித் தூவி விதை குழியிலிட்ட அந்தத் தோழன்-

ஐந்தாண்டுகளுக்கு முன்பு ' ஈரோஸ் ' அமைப்பு புலிகளோடு சங்கமித்தபோது, கடற்புலியாகியவன்.

அதன்பிறகு - அவனில்லாமல் கடலில் புலிகள் பாய்ந்ததாகச் சரித்திரமே இல்லை.

அவனுடைய கதை ஒரு நீண்ட காவியம்.

அதை முழுமையாக எழுதுகிறபோது - உலகப் புகழ்பூத்த புலிகள் இயக்கத்தின் கடற்போர் வரலாறாய் அது விரியும்......

காங்கேசன்துறைப் ' புலிப்பாய்ச்சல் ' வரையும்!

• • •

'' எட்டாண்டுகளுக்கு முந்திய வடமராட்சித் தாக்குதலைவிடவும், உயர்ந்த இராணுவ பரிமாணத்தைக் கொண்டது '' என, வர்ணிக்கப்பட்ட ' முன்னோக்கிப் பாய்தல்' -

விடுதலைப் போராட்டத்தின் அத்திவாரத்திற்கு வைக்கப்பட்ட குறி.

'' மைய யாழ்ப்பாணமே, பாய்ந்து முன்னேறுவதன் மைய இலக்கு '' என்று, படைத் தளபதிகள் பறைசாற்றிக்கொண்டார்கள்.

பல அரசியல் மேலாண்மைகளை எய்தும் சந்திரிகா அரசுத் தலைமையின் உள்நோக்கத்திற்காக நகர்த்தப்பட்ட படையெடுபபு -

மூன்று நாட்களில் முன்னூறு மக்களைப் படுகொலைசெய்து முன்னேறி வந்தது.

'' திறமையின்மையாலும், பலவீனத்தாலும் - சிங்கள தேச வீரர்களின் போராற்றலுக்கு எதிர்நிற்க முடியாமல், புலிப் பயங்கரவாதிகள் யாழ்ப்பாணத்தை விட்டுத் தப்பி ஓடிக்கொண்டிருக்கின்றார்கள் '' என்று சிங்களத் தளபதிகள் கொழும்பில் மார்தட்டிக் கொண்டார்கள்.

' முன்னோக்கிப் பாய்தல்' - புலிகள் இயக்கத்தின் போரியல் வல்லமைக்கு விடுக்கப்படும் பெரும் சவாலாகவும் பரிமாணம் பெற்றது.

பகைவனுக்குப் படுதோல்வியைப் பரிசளிக்க, தலைவர் முடிவெடுத்தார்.

தரையிலும் வானிலும் கடலிலும், முப்படைகளுக்கும் அதனைப் பகிர்ந்தளிக்கவும் அவர் எண்ணினார்.

அவரது எண்ணங்கள் பகைவனின் மடியில் நிதர்சனமாகின.

' முன்னோக்கிப் பாய்தல் ' மீது நிகழ்ந்தது 'புலிப்பாய்ச்சல் '!

படையெடுப்பின் ஒவ்வொரு அங்கத்திலும் விழுந்தது அடி.

நிலவழியாக நகர்ந்த தரைப் படையை எதிர்த்து முறியடிக்கும் சம நேரத்தில் -

வான்வழியால் துணைசேர்க்கும் விமானப்படையின் முதுகெலும்பை உடைக்கும அதே வேளையில் -

படையெடுப்பின் உயிர்நாடியென இயங்கிய கடல்வழி விநியோகத்திற்கும் அடிகொடுக்கவேண்டிய தேவையும் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டது.

அது ஒரு உடனடி ஏற்பாடு -

குறுகியகாலத் தயார்ப்படுத்தல்.

'முன்னோக்கிப் பாய்தல்' சமர் முனைக்குப் புதிய துருப்புக்கள் அனுப்பப்பட்டு, சிங்களப் படையணிகளுக்கு புத்தூக்கம் அளிக்கப்படுவதைத் தடுப்பதற்கும் -

படையெடுப்பு முனைக்கு இடையறாது மேற்கொள்ளப்பட்ட படைக்கல வழங்கலை நிறுத்துவதற்கும் மட்டுமன்றி -



கடற் கரும்புலிகள் மேஜர் தங்கன், மேஜர் நியூட்டன்.

தாக்கப் புறப்படும் தற்கொடை வீரர்க்கு
தாக்கும் வழிமுறை விளக்கிடும் தளபதி.

குடாநாட்டை முற்றுகையிட்ட போரபாயத்தை உடைத்தெறியவும், மக்களைப் பீடித்த பயபீதியைத் தகர்த்தெறியவும் என -

திடீரென ஒழுங்கமைக்கப்பட்ட 'புலிப்பாய்ச்சல்' தாக்குதல்திட்டத்தின் ஒரு அங்கமாகவும் நிகழ்த்தப்பட்ட - முன்னேற்பாடுகள் செய்யப்படாத - அதிரடி.

காங்கேசன்துறை கடற்படைத் தளம் -

வடபிராந்தியத்தில், சிங்களக் கடற்படையின் நிர்வாகச் செயலகமான காரைநகருக்கு அடுத்தபடியான ஒரு தளமாகவே இருப்பினும்கூட -

வடக்குப் போர் அரங்கின் தனி ஒரு வழங்கற் பாதையான கடல் வழிமூலம் - முப்படையினருக்குமான விநியோகத்தை மேற்கொள்ளும் பிரதான இறங்குதுறை என்ற வகையில், அது கேந்திர முக்கியத்துவம்பெற்று தனித்துவமானது.

மிக மிகப் பலத்த பாதுகாப்புக்கு உட்பட்ட அந்தப் படைத் தளத்தின் கடற்பரப்பிற்குள் ஊடுருவித் தாக்குதலை நிகழ்த்துவது என்பது, ஒரு சுலபமான காரியமல்ல என்பதும் - நாம் பெரும் இழப்பைச் சந்திக்கவேண்டிவரும் என்பதும் - எமக்குத் தெரிந்திருந்த போதும்......

யாழ். குடாநாட்டிற்குள் உருவாகியிருந்த நெருக்கடியான இராணுவச் சூழல் காரணமாக, காங்கேசன்துறைத் தளம் மீதான 'புலிப்பாய்ச்சல்' தவிர்க்கமுடியாததாகி இருந்தது.

இழப்பைக் கொடுத்தல், படையெடுப்பிற்குத் தடங்கலை ஏற்படுத்தல், எதிரிகளைத் திகைப்பிற்குள் ஆழ்த்துதல் போன்ற போர்த் தந்திரோபாய ரீதியான நோக்கங்களிற்காக மட்டுமன்றி -

எம் நீண்டகாலக் குறியான ஒரு கட்டளைக் கப்பலை மூழ்கடிக்கும் இராணுவ இலக்கை எய்துவதற்காகவும்தான் -

தாக்குதல் மையமாக காங்கேசன் துறையே தேர்ந்தெடுக்கப்பட்டது.

மின்காந்த அலை அதிர்வியக்கம் மூலம் - தன்னிலையிலிருந்து - வானூர்திகள், கடலூர்திகள் முதலியவற்றின் நிலைகளைக் கண்டறியும் ஆற்றல்மிகு ' தொலை நிலை இயக்கமானிகள்'( RADAR - றாடார் ) பொருத்தப்பட்ட - ' எடித்தரா ', 'அபிதா', ' விக்கிரம ' ஆகிய பெயர்களைக் கொண்ட மூன்று பாரிய கப்பல்கள் - மேற்கு, வடக்கு, கிழக்குக் கடற்பிராந்தியங்களுக்கான - சிங்களக் கடற்படையின் கட்டளைப் பீடங்களாகச் செயற்படுகின்றன.

புலிகளுக்கு எதிரான கடற் சண்டைகளில் ஈடுபடும் போர்ப் படகுகளின் மூளையாகச் செயற்பட்டு, அவற்றை வழிநடாத்தும் கட்டளைப் பணியை, இந்தத் தாய்க் கப்பல்களே ஆற்றுகின்றன.

அந்தவகையில் - ஒரு கட்டளைக் கப்பலை மூழ்கடிப்பதானது ஒரு இமாலய சாதனையும், இராணுவ ரீதியான ஒரு பெரு வெற்றியுமாகும்.

*1990 ஆம் ஆண்டு யூலை 10 ஆம் நாள் - காந்தரூபன், வினோத், கொலின்ஸ் ஆகிய கரும்புலி வீரர்கள் தாக்க முனைந்ததிலிருந்து -*

*1991 ஆம் ஆண்டு ஏப்ரில் 5ஆம் நாள் - சிதம்பரம், ஜெயந்தன் ஆகிய கரும்புலி வீரர்கள் தாக்கியது ஊடாக -*

*1994 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 16 ஆம் நாள் - காங்கேசன் துறையில் அங்கயற்கண்ணி ஊடுருவித் தாக்கியதுவரை -*

*எங்கள் கைகளிலிருந்து பல தடவைகள் தப்பிப்பிழைத்த ஒரு கட்டளைக் கப்பலை, 'புலிப்பாய்ச்சலில்' மூழ்கடித்த அந்த நிகழ்வு -*

*விடுதலைப் போராட்டத்தின் சரித்திரத்தில், பொன் எழுத்துக்களால் பொறித்துவைக்கவேண்டிய ஒரு வரலாற்றுச் சாதனையாகும்.*



**லெப். கேணல் மாதவி**
*(திருநாவுக்கரசு திருச்செல்வி)*
*இன்பருட்டி, அல்வாய் வடக்கு.*

'நீர்மேல் தாக்குதற் கரும்புலிகள்', 'சுலோஜன் நீரடித் தாக்குதற் கரும்புலிகள்', 'சாள்ஸ் சிறப்புக் கடற்படையணி', 'நளாயினி சிறப்புக் கடற்படையணி' ஆகிய - கடற்புலிகளின் நான்கு தாக்குதற் பிரிவுகள் இந்த நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டன.

கடற்புலிகளின் உயர் தளபதிகளினது நெறிப்படுத்தலின் கீழ் -

லெப்ரினன்ற் கேணல் நரேஸ், களமுனைக் கொமாண்டராக முழுத் தாக்குதலையும் வழிநடாத்தினார்.

லெப்ரினன்ற் கேணல் மாதவி, தாக்குதலில் பங்கேற்ற பெண்கள் படைப்பிரிவுகளை வழிநடாத்தினார்.

*மாதவி!*

கடற்புலிகள் மகளிர் படையணியை - நளாயினி விட்டுப் போன இடத்திலிருந்து - தொட்டு வளர்த்தெடுத்த அதன் சிறப்புத் தளபதி.

'அங்கயற்கண்ணி நீரடித் தாக்குதற் பிரிவு' 'நளாயினி சிறப்புக் கடற்படையணி', 'மங்கை படகுக் கட்டுமானப் பிரிவு', என, கடற்புலிகளின் மகளிர் அணி கிளை பரப்பியது அவளுடைய காலத்தில்தான்.

விடுதலைப் புலிகளின் கடற்படைக்காக, அவளது வழிப்படுத்தலின் கீழ், 'மங்கை படகுக் கட்டுமானப் பிரிவு' வடிவமைத்த - 40 அடிக்கு மேலான நீளம் கொண்ட - ஒரு புதியவகைச் சண்டைப்படகு. ஒரு அருமையான உருவாக்கம். நேரடியாகப் பரீட்சித்துப் பார்த்து தலைவர் அவர்கள் பாராட்டியது, வெறுமனே பண்புக்காக அல்ல; கடற் சண்டைகளில் அவை சிறந்த பயன்பாட்டைத் தரும் என்ற நமபிக்கையிலும்தான். →

www.eelamview.com

# அன்றைய நினைவோடு திறந்த

# இன்றைய வெற்றிக் களம்!



மண்டைதீவு வெற்றி : தலைவரோடு தளபதிகள்

**1990**ஆம் ஆண்டு, ஒகஸ்ட் 25 ஆம் நாள்.

யாழ்ப்பாணக் கோட்டையில் முற்றுகைக்குள் சிக்கியிருந்த தனது சிப்பாய்களைக் காக்க சிங்களப் படை மண்டைதீவை நோக்கி முன்னேறியது; தடுக்கும் ஆபத்தான ஒரு முயற்சியில் புலிவீரர்கள் சண்டையிட்டனர்.

சுற்றிவரக் கடல். வெட்டை வெளித் தரை. நாற்புறமும் சூழ்ந்து தாக்கிய பகைவனோடு நடந்த அந்தச் சண்டை துயரமானது.

எங்களது 44 வீரர்களை அன்று நாங்கள் பறிகொடுத்தோம்.

அது நடந்து ஐந்து ஆண்டுகளின் பின்னர் -

1995 ஆம் ஆண்டு, யூன் 28 ஆம் நாள்.

அன்றைய நினைவுகளைச் சுமந்தபடி -

யாழ்ப்பாணக் கடலைக் கடந்து நகர்ந்த புலிவீரர்கள், மண்டைதீவு சிங்களத் தளத்தினுள் பூகம்பத்தை விளைவித்தனர்.

யாழ். மாவட்டத் தாக்குதற் பிரிவு, வன்னி மாவட்டத் தாக்குதற் பிரிவு, கடற்புலிகளின் தாக்குதற் பிரிவு, மகளிர் படைத் தாக்குதற் பிரிவு ஆகியவற்றின் தளபதிகள் அணிகளை நடத்திச்செல்ல -


தலைவர் பிரபாகரனின் நெறிப்படுத்தலின் கீழ் -

தளபதிகள் சொர்ணம், சூசை ஆகியோரின் துணையோடு, தளபதி பானு ஒட்டுமொத்தமான தாக்குதல் திட்டத்தை வழிநடாத்தினார்.

அன்று எங்கள் 44 வீரர்களைச் சுற்றிவளைத்து வீழ்த்திய அதே நிலத்தில் - 120 சிங்களப் படையினர் பிணங்களாய்ச் சுருண்டனர்.

300 இற்கும் மேலான சுடுகருவிகளையும், 2 இலட்சத்திற்கு அதிகமான ரவைகள், வெடிப்பொருட்களுடன் ஏராளமான படைய உபகரணங்களையும் கைப்பற்றிய புலிகள் களத்தை விட்டு வெளியேறினர்.

கடற்புலிகள் தாக்குதலணியின் முக்கிய தளபதிகளுள் ஒருவரான





லெப். கேணல் சூட்டியும் இன்னும் எட்டுப் புலிவீரர்களும் இந்த வெற்றிச்சமரில் களப்பலியாகினர்.

மண்டைதீவுப் படைத்தளமானது, அதன்மீது- பெருமெடுப்பிலான ஒரு தாக்குதலை நடாத்த முடியாத புவியியல் அமைப்பையே கொண்டிருக்கின்றது. நாற்புறமும் கடலால் சூழப்பட்ட, வெட்டைத் தரையான ஒரு தீவே அதுவாகும். அத்தோடு -

நூற்றுக்கணக்கான காவல் நிலைகளையும், விசேட கடல் கண்காணிப்புக் கோபுரங்களையும் கொண்டு - ஒரு பிரதான முகாமிலும் 3 உப முகாம்களிலும் நிலைகொண்டிருந்த படையினருக்குள் - பல நூற்றுக்கணக்கான புலிவீரர்கள் வெற்றிகரமாக ஊடுருவித் தாக்குதலை நிகழ்த்திவிட்டு வெளியேறியமை,உலக இராணுவ வல்லுனர்களையே வியப்பில் ஆழ்த்திவிட்டது.

தாக்குதலை நிகழ்த்திய புலிப் படையணிகள் உச்சிப் பகற்பொழுதிலேயே நீரேரி கடந்து மீண்டுசென்றதைத் தடுக்க முடியாது, சிங்கள முப்படைகளும் பரிதவித்து நின்ற நிலை - சிங்களப் பேரினவாதத் தலைமையைத் தலைகுனியச் செய்துவிட்டது. ○

---

(10 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தனது ஒய்வற்ற உழைப்பின் பயனாக - கடற் பெண்புலிகளை, தனித்துச் சண்டையிடும் இன்னொரு வளர்ச்சிக் கட்டத்திற்குப் பரிணமிக்கச் செய்த பெருமைக்குரியவள் அவள்.

ஆண்கள் துணையின்றி - தனித்த படகுகளில் - தனித்த பிரிவாக, கடற்சண்டைகளிலும் பெண்கள் ஈடுபடுகின்ற இன்றைய காலம் மாதவி தோற்றுவித்ததுதான்.

மண்டைதீவில் அப்படித்தான்;

காங்கேசன் துறையிலும் அப்படித்தான்.

யூலைத் திங்கள் 16ஆம் நாள் - 1995.

அதிகாலை - 1. 00 மணி.

துறைமுகத்தின் உள்ளே - 'எடித்தரா' கட்டளைக் கப்பலோடு, 3 தரையிறக்கு கலங்கள் ( Landing Crafts ), மேலும் ஒரு கப்பல் என்பன இராணுவத் தளபாடங்களை இறக்கிக்கொண்டிருந்தன.

துறைமுகத்தின் வெளிப்பகுதியில் - போர்க்கலங்கள் பலம் வாய்ந்த வியூகமிட்டு வளைத்து நின்றன.

' டோறா ' அதிவேகத் தாக்குதற் படகுகள் எட்டு; ' சங்காய் ' பீரங்கிப் படகுகள் மூன்று.

இரும்புக் காவல்.



கடற் கரும்புலி
கப்டன் தமிழினி
(சிவப்பிரகாசம் கனிமொழி)
ஆதிகோவிலடி, வல்வெட்டித்துறை.

அலைமடியில் தவழ்ந்து அமைதியாக நெருங்கின புலிகளின் படகுகள்.

'சுலோஜன் நீரடித் தாக்குதற் பிரிவின்' வீரர்களான நியூட்டனும், தங்கனும் வெடிகுண்டுகளோடு 'எடித்தரா'வை அண்மித்தார்கள்.

ஆரம்பித்தது உக்கிரமான சண்டை.

காங்கேசன் கடற்பரப்பு போர்க்களமாய் மாறியது.

எம் போராட்ட வரலாறு தன்னில் பதித்துக்கொண்ட மிகப் பெரும் கடற் சமர்.

'எடித்தரா'வின் அடித்தளத்தை, வெடிகுண்டுகளோடு அணைத்து கரும்புலிகள் சிதறடித்தார்கள்.

அது நான்கு வரிகளில் எழுதிவிடும் சம்பவம் அல்ல; நாற்பதாண்டு காலச் சரித்திரத்தை மாற்ற அவர்கள் புரிந்த அரும்பெரும் செயல்! இராப்பகலாய் பட்ட கஷ்டங்களின் பெறுபேறு; வார்த்தைகளால் வர்ணிக்க இயலாத அளப்பரிய உயிர்த்தியாகம்.

பெண் கரும்புலிகளின் ஒரு வெடிகுண்டுப் படகு, தரையிறக்கு கலம் ஒன்றை நெருங்கியது. அசுர வேகம். மிக அண்மை .....!

போர்க்களங்கள் அபூர்வமானவை. அவற்றின் பொதுவான இயல்பு என்னவெனில் - நினைத்துப்போவது நிகழாமல்போகும்; நிகழ்ந்துவிடுவது நினையாததாய் இருக்கும்.

வெடிகுண்டுப் படகு சன்னங்கள் பாய்ந்து சேதப்பட்டுவிட தரையிறக்கு கலம் தாக்கப்படவில்லை.

ஐந்துமணிநேரச் சரித்திரச் சமர் முடிந்து விடியும்பொழுதில் எங்கள் தாக்குதலணிகள் களத்தைவிட்டு வெளியேறின.

நரேஸ் உயிரோடு வரவில்லை......

மாதவியின் உடல்கூட வரவில்லை......

நியூட்டன், தங்கன், தமிழினி வரவில்லை.

தோளோடு தோள் நின்று களமாடிய பதினொரு தோழர்கள் வரவில்லை.

பூநகரிச்சமரின்போது நாகதேவன் துறையில் கைப்பற்றிய விசைப் படகு ஒன்றும் மூழ்கிப்போனதால்- திரும்பி வரவில்லை ...! ○

www.eelamview.com

# தேசத்தின் இதயத்தில் நடந்த பெருஞ்சமர்!

சோகத்தை வெல்லத் தேவையானது வீரம்; ஆயினும் வீர முயற்சிகள் சிலவேளை, சோகத்தையும் தரலாம். ஆக்கிரமிப்பு ஆட்சியாளரிடமிருந்து விடுதலை வேண்டிப் போராடும் ஒரு தேசம் - இந்தவகைச் சோகத்தை - இடையிடையே சந்திக்கவேண்டி வரலாம். 28. 07. 1995 அன்று, தமிழீழம் அத்தகையதொரு சோகத்தைச் சந்தித்தது ( இந்தவகைச் சோகத்தை நேரகுசிவைத்து, சிங்கள தேசம் அடிக்கடி அனுபவிக்கின்றது என்பது வேறுவிடயம் ! ).

தமிழீழத்தின் இதயப் பகுதியாக இருக்கும் மணலாற்றுக் கோட்டத்தின் கணிசமான நிலத்தை ஆக்கிரமித்து வைத்திருக்கும் சிங்களப் படை முகாம்களில் ஐந்தைப் புலிவீரர்கள் தாக்கி அழிக்க முற்பட்டபோது - எதிர்பாராத வகையில் இந்தச் சோக அதிர்ச்சியைத் தமிழினம் எதிர்கொள்ளவேண்டியதாயிற்று. யாரோ ஒரு தேசவிரோதியின் காட்டிக்கொடுப்பால், புலிகளின் தாக்குதலை எதிரிப் படைகள் முன்கூட்டியே அறிந்துகொண்டன. இதனால், இந்தப் பிரதேசத்தில் உள்ள ஏனைய இராணுவ முகாம்களில் இருந்த கணிசமான படையினரைக் குறித்த முகாம்களுக்கு வரவழைத்து ஆட்பலத்தை ஒருங்குதிரட்டிய சிங்களத் தளபதிகள், தமது பிரமாண்டமான படைக்கல சக்தியை ( Fire Power ) சில குறித்த பகுதிகளை நோக்கி இலக்குவைத்து, தாக்கநகர்ந்த புலிகளை எதிர்பாராதவகையிலும் - எதிர்பாராத இடங்களில் இருந்தும் திருப்பித் தாக்கினர்; இந்த எதிர்பாராத நிகழ்ச்சியால் 180 போராளிகள் வீரச்சாவடைந்துவிட்டனர். ஆயினும், அந்த மரணப்பொறிக்குள் சிக்கிய புலிகளின் படையணிகள், வீரத்துடனும் - சமயோசிதத்துடனும் போராடி, வரவிருந்த பேரிழப்பைத் தவிர்த்துக் குறைந்த இழப்புடன் திரும்பினர்; இல்லையேல், இதைவிடப் பலமடங்கு சோகத்தைத் தமிழினம் எதிர்கொள்ளவேண்டியிருந்திருக்கும்.

'' எதிரியைவிடத் துரோகியே ஆபத்தானவன் '' என்ற தலைவரின் கூற்றின் தார்ப்பரியத்தை, இந்தச் சோக நிகழ்ச்சி துல்லியமாகக் காட்டி நிற்கின்றது.

எமது விடுதலைப் போரின் இராணுவ பரிமாணம் - இன்று - உலகமே வியக்கும்வகையில் வளர்ச்சிகண்டுவிட்டது . முன்னர் சிறிய தொகையினரான போராளிகள் - தாம் விரும்பிய இடத்தில்வைத்து - ஒரு குறித்த தொகையினரான படையினரைத் திடீரெனத் தாக்கி அழித்துவிட்டு, அடுத்தகணமே மறைந்துவிடுவர். ஆனால், இப்போதைய தாக்குதல்களின் இராணுவ பரிமாணம்அப்படியல்ல. ஆயிரக்கணக்கானபோராளிகள், பல்லாயிரக்கணக்கில் படையினர் நிலைகொண்டுள்ள இராணுவத் தளங்களை அல்லது இராணுவக் கிராமங்களைத் தேடிச்சென்று தாக்கி - நிலங்களை விடுவிக்க முயலும் அதியுயர் வடிவத்திற்கு, விடுதலைப் போரின் இராணுவ பரிமாணம் வளர்ந்துவிட்டது. இந்தப் பரிமாண வளர்ச்சிக்கேற்ப சில பிரத்தியேகப் பிரச்சினைகளையும் ஒரு விடுதலை இயக்கம் சந்திக்கவேண்டியது தவிர்க்கமுடியாதது. இந்தப் பிரச்சினைகளில் பிரதானமானது தாக்குதலின் இரகசியத் தன்மையைப் பாதுகாப்பது சம்பந்தப்பட்டது; அடுத்தது. எதிர்பாராத நெருக்கடிகளால் தாக்குதல் முயற்சிஆபத்தில்சிக்கிக்கொண்டால் ஏற்படும் இழப்பு சம்பந்தப்பட்டது.

ஒரு சிறியதொகைப் போராளிகள் மேற்கொள்ளும் ஒரு கெரில்லாத் தாக்குதலின் இரகசியத் தன்மை மக்களுக்குத் தெரியவர, வாய்ப்புக்கள் மிகக்குறைவு. ஆனால், பெருந்தொகைப் போராளிகள் பங்குகொள்ளும் ஒரு பாரியபடைத்தள அழிப்பின் இரகசியத் தன்மை, ஒரு குறித்ததொகை மக்களுக்கும் - ஏதோ ஒரு வகையில் கசிய வாய்ப்புக்கள் உண்டு. இந்த நிலையில், இரகசியம் பேணுதல் என்பது, ஒரு சிறிய கெரிலலா அணியின் ஒருசில வீரர்களின் கடமை என்ற தன்மை மாறி, மக்களின் கடமை என்ற விரிந்த நிலை தவிர்க்கமுடியாது எழுகின்றது. இந்தக் கட்டத்தில்தான், மக்களாகிய நாம் பொறுப்புணர்ச்சியுடனும் - விழிப்புணர்வுடனும் போராட்ட நடவடிக்கைகள் பற்றிய செய்திகளை மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ள வேண்டும். இத்தகைய பொறுப்புணர்வையும் - விழிப்புணர்வையும் போராளிகள் மிகக் கடுமையாகக் கடைப்பிடிக்கவேண்டும். எமது படையணிகளின் பிரயாணங்களை அல்லது புதிய இடங்களில் எமது படையணிகளின் திடீர்ப் பிரசன்னங்களை ( தங்குதல்களை ) காணும் மக்கள், அவைபற்றிய செய்திகளையோ அல்லது 'இந்த முகாமுக்கு அடிவிழப்போகுது; அந்த முகாமுக்கு அடிவிழப்போகுது' என்ற தங்களின் ஊகங்களையோ எவருடனும் கதைக்கக்கூடாது. ஏனெனில், அவ்வாறு கதைக்கும்போது, அப்படியே 'காதுமாறிக் காதுமாறி' உளவாளியின் காதுக்குள்ளும் - அந்த அதி உயர் இரகசியம் - சென்றுவிட்டால், அதன் விளைவுகள் ஒரு தேசிய இனத்தையே துயரத்தில் ஆழ்த்திவிடும் என்பதை, நாம் மறந்துவிடக்கூடாது.

எமது மண்ணில் நிலைகொண்டிருக்கும் எதிரிப் படைகளின் பலம் பாரியது என்பது எல்லாருக்கும் தெரியும். எனவே, பாரிய படைபலத்தைக்கொண்ட இந்தப் படைமுகாம்களைத் தாக்கி அழிப்பது என்பது சாதாரண விடயமல்ல. எதிரியின் காவல் நிலைகளையும் - அந்தக் காவல் நிலைகளின் ஆயுத பலத்தையும் - மற்றும் எதிரி முகாமின் பாதுகாப்பு வியூகங்களையும் கண்டறிந்துகொள்வதுடன், எதிரி முகாமின் மொத்த ஆள் - ஆயுத பலத்தையும் அறிந்த பின்பே அந்தப் படைமுகாமைத் தாக்கி அழிக்கத் திட்டம் தயாரிக்க முடியும். இந்தளவு இராணுவ விபரங்களும், எதிரி முகாமினுள்ஏதோ ஒரு இடத்தில் உள்ள கரும்பலகையில் எழுதப்பட்டிருக்கமாட்டா. ஒவ்வொன்றாக இந்தத் தகவல்கள் சேகரிக்கப்படவேண்டும்; சேகரிக்கப்படும்ஒவ்வொரு தகவலும் சரிபார்க்கப்பட வேண்டும்; சரிபார்க்கப்பட்டபின் அந்த அந்தப் புவியியல் அமைப்பிற்கும் - ஆயுத பலத்திற்கும் ஏற்றாற்போல் தாக்குதற் திட்டங்களை வகுக்கவேண்டும்; ஒவ்வொரு தாக்குதலுக்கும் ஏற்றவாறு பல்வேறு தாக்குதற் தந்திரோபாயங்கள் வகுக்கப்படவேண்டும். எனவே, எதிரி முகாம் மீதான தாக்குதல் நாளன்று முதலாவது துப்பாக்கி வெடிக்க முன்னரே, வேவுப் போராளிகள் பல உயிரிழப்புகளைச் சந்தித்தபடி ஒரு வேவுச் சமரையே நடாத்தி முடித்திருப்பார்கள்.

தாக்குதற் திட்டங்கள் நன்றாக வரையப்பட்டாலுங்கூட அது தடங்கல்கள் எதுவுமின்றி நடைமுறைப்படுத்தப்படவேண்டும். 'கண்ணுக்குள் எண்ணெய் இட்டுவிட்டு' காவல் நிலைகளில் காத்திருக்கும் எதிரிப் படையாட்களின் கண்களில் மண்ணைத் தூவிவிட்டு, அவர்களது காவல் நிலைகளுக்கு அருகே அல்லது அதை ஊடுருவி உள்ளே சென்று தாக்குதலை நடாத்துவது என்பது, சாதாரண விடயமல்ல. எதிரி முகாம் நோக்கிய பலமுனை நகர்வுகளில் ஏதாவது ஒரு நகர்வை, எவனாவது ஒரு எதிரிச் சிப்பாய் கண்டுவிட்டால், அந்த முகாமே விழித்துக்கொள்ளும். வெளிச்சக்குண்டுகள் மூலம், இரவு பகலாக்கப்படும். 'வந்தா வா ! போனாப் போ !' என்று கருதி விதைக்கப்படும் பெரும்போக நெல் விதைப்பைப் போல, எதிரியின் எறிகணைகள் முகாமைச் சூழ அள்ளி விதைக்கப்படும். அந்த எறிகணை விதைப்பிற்கு நீர் பாய்ச்சுவதுபோல ரவைமழை பொழியும். இந்த வெடிமருந்துப் புயலுக்குள் நின்றுபிடித்து - நிலை தடுமாறாது - எதிரிப் படைகளைச் சுட்டுவீழ்த்தி, அவனது நிலைகளைக் கைப்பற்றுவது என்பது சாதாரண விடயமல்ல. நூற்றுக்கணக்காக வரும் எதிரி வீரர்கள் முன்பாக - கோயில் நந்திபோல நின்று - எதிரிகளைச் சுட்டுவீழ்த்தும் 'ரம்போ' திரைப்படப் பாத்திரத்தைப்போல நிஜமான போர்க்களம் நிச்சயமாக இருக்காது.

இப்படித்தான் சில ஆண்டுகளுக்கு முன்னர், ஈரான் நாட்டின் தலைநகரான 'தெஹ்ரானில்' பணயக் கைதிகளாக வைக்கப்பட்டிருந்த தனது குடிமக்களை மீட்கவென, அமெரிக்க வல்லரசு ஒரு பாரிய தாக்குதற் திட்டத்தை நடைமுறைப்படுத்தியது. மத்தியதரைக் கடலில் நிறுத்தப்பட்டிருந்த அதனது கடற்படைக்கப்பலில் இருந்து மீட்பு நடவடிக்கைக்கெனப் புறப்பட்ட உலங்குவானூர்தி அணி ஒன்று, ஈரானின் பாலைவனத்தில் புயலுக்குள் சிக்கி விபத்திற்கு உள்ளானதால், இரண்டு உலங்குவானூர்திகளையும் - சில படைவீரர்களையும் அது இழந்ததுடன், மீட்பு முயற்சியும் நிறைவேறாது போனது. இதேபோலவே, எகிப்திய விமானம் ஒன்றைக் கடத்திச்சென்ற எகிப்திய தீவிரவாதிகள், அந்த விமானத்தை லிபிய நாட்டு விமானத் தளமொன்றில் நிறுத்திவைத்திருந்தபோது, 40பேர் கொண்ட எகிப்திய கொமாண்டோ அணி ஒன்று வான்வழிசென்று - திடீர்த் தாக்குதலைத் தொடுத்து, தமது விமானத்தையும் - பயணிகளையும் மீட்க ஒரு துணிகர முயற்சி செய்தது. ஆனால், இந்த முயற்சியில் 40 கொமாண்டோக்களையும் எகிப்திய அரசு பறிகொடுத்துவிட்டது. திட்டமிட்டுச் செல்வதும் - எதிர்பாராத ஒரு தடையால் அல்லது காட்டிக்கொடுப்பால் திட்டம் நிறைவேறாது இழப்புக்களுடன் திரும்புவதும் - அல்லது திரும்ப முடியாமல் தாக்குதல் அணிகள் அழிந்துபோவதும், போரியல் யதார்த்தம் ஆகும்.

இதேவேளை, எதிர்பாராத ஒரு இக்கட்டுக்குள் பல்லாயிரம் பேர்கொண்ட ஒரு படையணி சிக்கி, அழிந்துபோகவேண்டிய அபாயத்தில் இருக்கும்போது, வெல்வதற்காக அல்ல - அந்தப் படையணியின் அழிவைக் குறைப்பதற்காகப் போர்புரிந்து, களத்தைவிட்டுப் பின்வாங்கி மீண்டுவரும் வெற்றிகரச் சமர்களை உலக வரலாற்றில் காணலாம். 'டங்கேக் சமர்' என்ற ஒரு புகழ்பெற்ற சமர் உண்டு. இரண்டாம் உலக மகா யுத்தத்தின்போது, பிரான்சு தேசம் ஜேர்மனியிடம் வீழ்ந்தபோது, பிரான்சில் நிலைகொண்டிருந்த ஆங்கில பிரான்சு கூட்டுத் துருப்புக்கள் மூன்றரை இலட்சம் பேர் போரிட்டபடி பின்வாங்கி இங்கிலாந்து மீண்டதை, ''அற்புதமான ஒரு மீட்பு நடவடிக்கை'' என்று வின்சன்ற் சேர்ச்சில் வர்ணித்துள்ளார். அதாவது, போரிடச் சென்ற படை எதிர்பாராத விதத்தில் தோல்வியைச் சந்திக்க நேரிடும்போது, படையாட்களை அழிய விடாது மீட்டுவரும் செயலும் வெற்றியின் ஒரு அம்சம் தான்.

துணிவிலும் - தாக்குதற் திறனிலும் - போர்த் திட்டமிடலிலும், சிங்களப் படைகளைவிட புலிகள் இயக்கம் மேலோங்கி நிற்கின்றது என்பது, உலகிற்கே தெரியும். 'மூன்றாம் ஈழப்போர்' ஆரம்பித்த நாளில் இருந்து அடுத்தடுத்து இராணுவ வெற்றிகளைப் பெற்ற புலிகள் இயக்கம், சிங்களப் படைக்கு ஒரு தொடர் சோகத்தைக் கொடுத்தது.

* சிங்களக் கடற்படையின் அதி சக்திவாய்ந்த சண்டைக் கப்பல்கள் இரண்டை (சூரயா, ரணசுறு.)திருக்கோணமலைத் துறைமுகத்தினுள் கரும்புலிகள் மூழ்கடித்தபோதும்......
* அடுத்தடுத்து இரண்டு 'அவ்ரோ' விமானங்களை விழுத்தி சுமார், 100 படையினரைக் கொன்றபோதும் .....
* தென் தமிழீழத்தில் கட்டுமுறிவு, தரவைக் குளம் உட்பட பல படைமுகாம்களையும் பல ரோந்து அணிகளையும் அழித்து- சில நூறு பேரைக் கொன்றபோதும்......
* மண்டைதீவுக்குள் புலிவீரர்கள் புகுந்து - 120 படையினரைக் கொன்று, ஆயுதக் கிடங்கையும் கைப்பற்றி வந்தவேளையிலும்......
* 'புலிப்பாய்ச்சலில்' புக்காரா வீழ்த்தப்பட்டு - எடித்தரா மூழ்கடிக்கப்பட்டு - 150இற்கும் அதிகமான படையினர் கொல்லப்பட்டபோதும்......

சிங்களதேசம் அதிர்ச்சிமேல் அதிர்ச்சி அடைந்து, இடிந்துபோய் இருந்தது.

இவ்விதம் அடுத்தடுத்து வெற்றிகளைப் பெற்றுவந்த தமிழினம், 28. 07. 1995 அன்று, மணலாற்றில் ஒரு பேரிழப்பைச்சந்தித்துவிட்டது. ஆயினும், அந்தப் பேரிழப்பிலும் ஒரு பெரும் நிம்மதி உள்ளது. அதாவது, தாக்குதலின் இராணுவ பரிமாணமும் - வெற்றிகரமாகச் செய்து முடிக்கப்பட்ட ஆட்டிலறி தகர்ப்பும் - மற்றும் பேராபத்தை எதிர்கொண்டபோதும் ஒப்பீட்டளவில், குறைந்த இழப்புக்களுடன் புலிகளின் படையணிகள் பாதுகாப்பாக மீண்டுவந்த நிலையும், இழப்புக்கள் ஏற்படுத்திய சோகத்திற்குள்ளும் நிம்மதி அளிக்கின்றன.

நாங்கள் ஒரு சமரை (Battle) வெல்லத் தவறிவிட்டோம் என்பது உண்மைதான்; ஆயினும், விடுதலைப் போரில் ( War ) - இன்றும் - நாம் முன் நிலையிலேயே இருக்கின்றோம் !

இதேவேளை, திட்டமிட்டபடி ஐந்து முகாம்கள் மீதான அந்தப் பெருந்தாக்குதல் வெற்றிகரமாக நடந்திருந்தால், சிங்களப் படைகளின் பாரிய புதைகுழியாக மணலாறு மாறியிருக்கும்; அது சிங்கள தேசத்தையே உலுக்கி எடுத்திருக்கும். எனவே, தமிழீழம் ஒரு பேரிழப்பைச் சந்தித்தது என்பதைவிட, எதிரிச் சேனை மயிரிழையில் தப்பிவிட்டது என்பதே இந்தத் தாக்குதல் தொடர்பான சரியான மதிப்பீடாகும்.

சுருக்கமாகச் சொன்னால், 28.07.1995 ஆம் திகதியிலான பெருந்தாக்குதல் என்பது, 'யானைக்குக் குறிவைத்து குறிதவறிய வேலுக்கு ஒப்பானதே.' தமிழ்வேதம் தந்த வள்ளுவப் பெருந்தகை கூறுவதுபோல...... 'முயலுக்கு எய்து அதைக் கொன்ற அம்பைவிட, யானைக்குக் குறிவைத்து வீசி - இலக்குத் தவறிவீழ்ந்த வேலுக்கே பெருமை அதிகம்.'

யாரோ ஒரு கோடரிக்காம்பின் தேசவிரோதச் செயலால், மணலாற்றைத் துவம்சம் செய்துகொண்டு நிற்கும் 'யானை' தற்காலிகமாகத் தப்பிவிட்டது -

ஆனால், இனிமேலும் வேல்கள் வீசப்படும்! O

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

www.eelamview.com